AHARAM

அகரம்

தரம் 5 - 11 வரை

எண்: 07 எழுத்து: 12 டிசம்பர் 2013

www.aharam.lk

PUBLIC LIBRARY
JAFFNA

கே/மா/ பதுரியா
மத்திய கல்லூரி

சாதிக்கப் பிறந்தவர்கள் நாம்



ஜெலி மீன்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் பிரபலமான சில நூலகங்கள்

கோங்ரஸ் நூலகம்
(The Library of congress)

- இது அமெரிக்காவின் வொஷிங்டன் நகரில் அமைந்துள்ளது.
- இது 1800 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நிர்மாணிக்கப்பட்டது.
- இதில் 32 மில்லியனுக்கும் அதிகமான நூல்கள் மற்றும் அச்சிடப்பட்ட பொருட்கள் காணப்படுகின்றன.
- இங்கு 12.5 மில்லியன் புகைப்படங்கள், 5.3 மில்லியன் பிராந்திய வரைபடங்கள், 62 மில்லியன் கையெழுத்து பிரதிகள் என்பனவும் காணப்படுகின்றன.

- இது ரஷ்யாவின் மொஸ்கோ நகரில் அமைந்துள்ளது.
- 1795 மே 16ல் இது நிர்மாணிக்கப்பட்டது.
- இதில் 17.5 மில்லியனுக்கும் அதிகமான நூல்கள், 13 மில்லியன் பத்திரிகைகள், 150,000 வரைபடங்கள் உட்பட மேலும் பல ஆவணங்களும் காணப்படுகின்றன.
- வருடாந்தம் 1.5 மில்லியன் மக்கள் இங்கு வருகை தருகின்றனர்.
- இந்நூலகத்தில் நாட்டின் வரலாற்று பாரம்பரிய, கலாசார கருவூலங்கள் என்பன காணப்படுகின்றன.

ரஷ்ய தேசிய நூலகம்
(The Russian National Library)

ஜேர்மனியின் தேசிய பொருளாதார நூலகம்
(The German National Library of Economic)

- இது ஜேர்மனியின் Kiel நகரில் அமைந்துள்ளது.
- 1919இல் இது நிர்மாணிக்கப்பட்டது.
- இது உலகின் மிகப்பெரிய பொருளாதார நூலகமாகக் கருதப்படுகின்றது.
- இதில் 4.3 மில்லியன் அளவான நூல்கள் மற்றும் ஏனைய வெளியீடுகள் காணப்படுகின்றன.
- இங்கு வர்த்தக, பொருளாதார, நிதியியல் விடயங்கள் அடங்கலான தொகுப்புகளும் ஆவணங்களும் காணப்படுகின்றன.

ஒஸ்ரிய தேசிய நூலகம்
(Austrian National Library)

- இது வியன்னா நகரில் அமையப்பெற்றுள்ள ஒஸ்ரியாவின் மிகப்பெரிய நூலகமாகும்.
- இது 18ஆம் நூற்றாண்டில் நிர்மாணிக்கப்பட்டது.
- இதில் 7.4 மில்லியன் வித்தியாசமான தொகுப்புகள் மற்றும் ஆவணங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்: 07 டிசம்பர்: 2013 எழுத்து: 12

AHARAM அகரம்

உள்ளே...

சாதிக்கப் பிறந்தவர்கள் நாம் 21



ஜெலி மீன்கள் 06

தீர்வு என்ன? 28

15



எனக்கு நானே முதல் நண்பன் 36

38

09

பாடத்திட்டம்

கணிதம்	30	வரலாறு	18
விஞ்ஞானம்	33	புலமைப் பரிசில்	39

PUBLIC LIBRARY JAFFNA

பிரதம ஆசிரியர்
டாக்டர் ஆகில் அஹ்மட் ஷரிபுத்தீன்

ஆலோசனைக் குழு
அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

எம்.எச்.எம். ஹஸன் M.ED
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி, தேசிய கல்வி நிறுவகம்)

ஜெஸீமா ஆதம் லெப்பை B.Sc
(விஞ்ஞானப் பிரிவு, தேசிய கல்வி நிறுவகம்)

பொறுப்பாசிரியர்
ஜே.எம். அஸீம் (நளீமி)

உதவி ஆசிரியர்
எம்.எஸ்.அலா அஹமட் (நளீமி)

தளக் கோலம்
எம்.ஐ.எம். ஹரீஸ்

தொடர்புகளுக்கு:
அகரம்
77, தெமடகொட வீதி
கொழும்பு 09
தொ.பே : 011 268 9324
பெக்ஸ் : 011 268 6030
www.aharam.lk
E.mail: editor@aharam.lk

சந்தா விபரம்
தனிப்பிரதி 40/-
1 வருட சந்தா 700/-
6 மாத சந்தா 350/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசு இரிதல்

தம்பி தங்கைகளே, வருட இறுதிப் பரீட்சை முடிவடைந்து விட்டது. அடுத்து விடுமுறை.

பரீட்சைப் பெறுபேறுகள் உங்கள் கைகளுக்குக் கிட்டியிருக்கும். உங்களது ஒரு வருட முயற்சியின் அறுவடை உங்களை மகிழ்வித்திருக்கின்றதா? அது உங்களுக்குப் போதுமானதாக இருக்கின்றதா?

உங்களது எண்ணம் (நிய்யத்), உங்களது முயற்சி, உங்களது தியாகம், உங்களது அர்ப்பணிப்பு ஆகியவற்றிற்கும் அவற்றின் விளைவாக நீங்கள் அடைந்திருக்கும் அடைவுக்கும் இடையேயான தொடர்பை சற்று சீர்தூக்கிப் பாருங்கள்.

எண்ணமே வாழ்வு என்பதற்கும் முயற்சி திருவினையாக்கும் என்பதற்கும் அர்த்தம் உங்களுக்குப் புரிந்திருக்கும்.

இன்னும் சில ஆண்டுகளுக்குப் பின்னர், அதாவது உங்களுக்கு கிட்டத்தட்ட முப்பத்தைந்து நாற்பது வயதாகின்றபோது எனும் நாட்களைக் கற்பனைசெய்து பாருங்கள். சிறிது நேரம் கற்பனை செய்யுங்கள். அந்த எதிர்கால நாட்களில் நீங்கள் யாராக இருக்க ஆசைப்படுகின்றீர்கள்? நீங்கள் ஆசைப்படுகின்ற அந்த நபராக, அந்த ஸ்தானத்தில் உங்களை வைத்து அழகு பாருங்கள். உங்களது மனம் திருப்தியோடு சந்தோசப்படுகின்றதா?

இந்தக் கற்பனையை ஒரு பெரும் படமாக (Big Picture) வடிவமைத்துக் கொள்ளுங்கள். அந்தப் படத்தை ஒலிகளாலும் வண்ணங்களாலும் மணங்களாலும் சுவைகளாலும் உணர்ச்சிகளாலும் நிரப்பி முழுமைப்படுத்திக் கொள்ளுங்கள். உங்களது அந்தப் படம் ஐம்புலன்களாலும் உணரப்படட்டும். நீங்கள் இரசிக்கின்ற இந்தப் படத்தை உங்களது மனதில் ஆசையோடு பதித்துக் கொள்ளுங்கள். அதனை மீண்டும் மீண்டும் மீட்டிப் பாருங்கள்.

உங்களது எதிர்கால வடிவத்தை நீங்கள் உங்கள் மனக் கண்ணில் இப்போது வடிவமைத்துக் கொண்டுவிட்டீர்கள். நீங்களே உங்களது சிற்பியாக ஆகிவிட்டீர்கள். இனியென்ன செதுக்கல் வேலையை ஆரம்பிக்க வேண்டியது தான்.

விடாமுயற்சியும் தியாகங்களும் அர்ப்பணிப்புகளும் உங்களை நீங்களே செதுக்கும் உளிகள். அவற்றை அடிக்கடி கூர்மைப்படுத்திக் கொள்ளுங்கள். செம்மைப்படுத்திக் கொள்ளுங்கள்.

உங்களது எதிர்காலக் கற்பனையை உங்களது பெற்றவர்கள், மிக நெருக்கமான உறவினர்கள், நம்பகமான நண்பர்கள் ஆகியோரிடம் சொல்லி வையுங்கள். ஏனெனில், நீங்கள் சோர்வடைகின்றபோதும் பராக்காக ஆகின்றபோதும் இவர்கள் உங்களை ஞாபகமூட்டுவார்கள். உங்களுக்குப் பக்கபலமாக இருப்பார்கள். உங்களது சின்னச் சின்ன அடைவுகளின் போது உங்களைப் பாராட்டி ஊக்கப்படுத்துவார்கள்.

உங்களது கற்பனைச் சிற்பம் படிப்படியாக உருவாகின்றதா என்பதை அவ்வப்போது உங்களது பெரும் படத்துடன் சீர்தூக்கிப் பார்த்துக் கொள்ளுங்கள். அவ்வாறு சீர்தூக்கிப் பார்க்கும் ஒரு சந்தர்ப்பந்தான் இந்தப் பரீட்சைப் பெறுபேறுகள். நெளிவுகளை நிமிர்த்துங்கள். சுழிவுகளை செம்மைப் படுத்துங்கள். இடைவெளிகளை நிரப்புங்கள். பணியைத் தொடருங்கள்.

நம் அனைவரின் முன்னும் மறுமை வாழ்வு எனும் மிகப்பெரிய பெரும் படம் இருக்கின்றது என்பதனையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்குர்ஆன் கூறும் கதைகள்

மீன் வயிற்றில் வாழ்ந்த நபி யூனுஸ் (அலைஹிஸ்ஸலாம்)

நபி யூனுஸ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் தனது தவறை உணர்கின்றார்கள். தனது இரட்சகன் தூய்மையானவன் என்பதைப் புரிந்து கொள்கிறார்கள். அவன் ஒருபோதும் தன் அடியார்களுக்கு அநியாயமிழைப்பதில்லை. மனம் இளகி, உருகி அவனை அழைத்தால் நிச்சயம் அல்லாஹ் பதில் அளிப்பான்.

இறைவனைத் துதிபாடும் களங்கமில்லா அழகிய வார்த்தைகளை நபி யூனுஸ் ஆழ் கடலின் கருமிருளில் செவிமடுத்தார்கள். அது அவர்களுக்கு இறை நினைவை மீட்டியது. அவர்களும் அல்லாஹ்வை அழைத்தார்கள். அவன் தூயவன் என்பதை உரைத்தார்கள். தனக்குத் தானே அநியாயம் இழைத்ததாக ஏற்றார்கள். அல்லாஹ்வின் தூய்மையை உள்ளத்தால் ஏற்பதும் அதனை உலகமறியச் செய்வதும் நமது மீட்சிக்கு வழியாகும். நபி யூனுஸ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் அல்லாஹ்வைத் துதித்து அவனை அழைக்காது புறக்கணித்திருந்தால் மறுமை வரையிலும் அவரை மீன் வயிற்றில் அல்லாஹ் வைத்திருப்பான்.

அல்லாஹ் அவரது தூய அழைப்புக்கு பதிலுரைத்தான். அவரை மீன் வயிற்றிலிருந்து பாதுகாத்து வெற்றிபெறச் செய்தான். அவர் ஆழ்கடலிலிருந்து வெளியேற்றப்பட்டார். வெளியேற்றப்பட்டது மகிழ்வைத் தந்தாலும் தான் தனித்து விட்டதை உணர்ந்தார்கள். தனித்துப் போன சிறகு முளைக்காத குஞ்சுப் பறவை போல் அவரது நிலை ஆகியது.

அல்லாஹ் அவர் மீது பேரருள் புரிந்தான் அவருக்கு நீண்ட நிழல் வழங்க தாவரமொன்றை அல்லாஹ் முளைப்பித்தான். அதன் மூலம் அவர் நிழல் பெற்றார். அதன் மூலம் தன் உணவுத் தேவையை நிறைவேற்றினார். பின்னர் அத்தாவரம் காய்ந்து விட்டது. அது காய்ந்து விட்டதைக் கண்டபோது அவர் அழுது விட்டார்.

அப்போது அல்லாஹ் அவருக்கு வஹி அறிவித்தான். ''காய்ந்து போன மரத்திற்காகவா அழுகிறீர் என வினவினான். உம்மை நாலாயிரம் அல்லது அதற்கு அதிகமான எண்ணிக்கை கொண்டோருக்கு தூதராக அனுப்புகின்றோம்.'' பின்னர் அங்கிருந்து அவர் வெளியேறினார். வழியிலே சிறு வயது இடையனொருவனைச் சந்தித்தார். அவனிடம் எங்கிருந்து வருகின்றாய் என வினவ அவனோ ''நான் நபி யூனுஸ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களது சமூகத்திலிருந்து வருகின்றேன்'' என பதிலளித்த போது நபி யூனுஸ் (அலைஹிஸ்ஸலாம்) ''நீ உனது சமூகத்தாரிடம் யூனுஸை சந்தித்தாகவும் அவர் தன் சமூகத்தாருக்கும் சலாம் உரைத்ததாகவும் கூறு'' என்றதற்கு அச்சிறுவன்: ''நீங்கள் யூனுஸ் என்றிருந்தால் நமது சமூகத்தின் நிலைப்பாட்டை அறிவீர்கள். அதாவது ஒருவர் ஒரு செய்தியை எத்திவைத்து அதற்கு சான்றாதாரம் இல்லையென்றால். அவர் பொய்யுரைத்ததாகவே கருதப்படுவார் ஆகவே அவரை அச்சமூகம் கொன்று விடும். உம்மைச் சந்தித்த செய்தியைச் சொல்வதாக இருந்தால் யார் எனக்கு சாட்சி சொல்வார்கள்'' என வினவினான். ''உனக்கு இத்தாவரமும் இந்நிலமும் சாட்சியாக இருக்கும்'' என்றார் நபி யூனுஸ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள். அப்படியெனில் அவை இரண்டிற்கும் கட்டளையிடுவீராக என சிறுவன் கேட்டுக் கொள்ளவே நபி யூனுஸ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் கட்டளையிட்டார்கள். அப்போது அத்தாவரமும் நிலமும் சாட்சி சொல்லுவதாக ஏற்றுக்கொண்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



عَنْ أَنَسٍ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ: قَالَ لِي رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: يَا بُنَيَّ، إِذَا دَخَلْتَ عَلَى أَهْلِكَ، فَسَلِّمْ، يَكُنْ بَرَكَةً عَلَيْكَ، وَعَلَى أَهْلِ بَيْتِكَ (رواه الترمذي)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக அனஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள் ''மகனே! நீ வீட்டுக்குச் சென்றால் உன் குடும்பத்தினருக்கு ஸலாம் கூறுவாயாக. அது உனக்கும் உனது குடும்பத்தினருக்கும் பரக்கத்தாக அமையும்.'' (திர்மிதி)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கற்றுத் தந்த நற்பண்புகளில் ஒன்றுதான் ஒரு மனிதன் தன்னுடையதும், பிறருடையதும் வீட்டினுள் நுழையும் போது ஸலாம் கூறி, அனுமதி பெற்று நுழைய வேண்டும் என்ற பாடமாகும்.

ஸலாம் கூறுவதனை சிலர் சாதாரண ஒரு விடயமாகக் கருதலாம். இன்னும் பலர் இந்த நற்செயலைச் செய்ய வெட்கப்படலாம். ஆனால், இஸ்லாத்தில் மிகவும் சிறப்பித்துச் சொல்லப்பட்டுள்ள அமல்களுள் ஸலாமும் ஒன்றாகும்.

''ஒரு மனிதர் நபியவர்களிடத்தில் இஸ்லாத்தில் சிறந்தது எது எனக் கேட்ட போது, உணவளிப்பதும் அறிந்தவர்களுக்கும் அறியாதவர்களுக்கும் ஸலாம் கூறுவதுமாகும் என்று நபியவர்கள் பதிலளித்தார்கள்.''

(அல்புகாரி, முஸ்லிம்)

மேலும் நபியவர்கள் ஸலாத்தின் முக்கியத்துவத்தைப் பற்றிச் சொல்கின்ற போது அது மற்றவர்களுடன் நேசம் கொள்வதற்கு வழியேற்படுத்தி அதன் மூலம் ஈமானை அதிகரிக்கச் செய்து சுவனம் வரை இட்டுச் செல்கின்றது என்றார்கள்.

ஒருவர் தனது சொந்த வீட்டிற்குள் நுழையும் போதுகூட இத்தகைய ஸலாத்தைக் கூறியே நுழைய வேண்டும் என்பதனையே நபியவர்கள் தனது பணியாளரான அனஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களுக்கு கூறிய அறிவுரையின் மூலம் புரிந்து கொள்ள முடிகின்றது.

ஏனெனில், ஒருவர் தனது வீட்டினுள் நுழைகின்ற போது வீட்டிலுள்ளோர் எந்நிலையில் இருந்தாலும் அவர் கூறுகின்ற ஸலாத்தினூடாக வீட்டிலுள்ளோர் தம்மை சுதாகரித்துக் கொள்வதற்கு வழியேற்படும்.

எனவேதான், ஒரு மனிதன் தனது தாயின் அறையினுள் நுழையும் போதுகூட ஸலாம் கூறி அனுமதி பெற்று நுழைய வேண்டும் என இஸ்லாம் வழிகாட்டுகின்றது. இதனால் ஸலாம் கூறியவர் நன்மை பெறுவதோடு ஸலாம் சொல்லப்பட்டவர் பல அசௌகரியங்களிலிருந்து தன்னைக் காத்துக்கொள்ள வழியேற்படுகின்றது.

அதேபோன்று பிறர் வீட்டினுள் நுழையும் போதும் கட்டாயம் ஸலாம் கூறி அவர்களின் அனுமதி கிடைத்த பின்னரே அவர்களது வீட்டினுள் நுழைய வேண்டும். இதனை அல்குர்ஆனும் பின்வருமாறு எடுத்துரைக்கின்றது.

''ஈமான் கொண்டவர்களே! உங்கள் வீடுகளல்லாத (வேறு) வீடுகளில், அவர்களிடம் அனுமதி பெற்று, அவர்களுக்கு ஸலாம் சொல்லாதவரை (அவற்றினுள்) பிரவேசிக்காதீர்கள். (அவ்வாறு நடப்பது) உங்களுக்கு நன்மையாகும். நீங்கள் நற்போதனை பெறுவதற்காக (இது உங்களுக்கு சொல்லப்படுகின்றது).''

(24:27)

எந்தவொரு வீட்டினுள் நுழையும் போதும் ஸலாம் கூறி அனுமதி பெற்றுச் செல்வது அல்லாஹ்வினதும் அவனது தூதரினதும் கட்டளைகளை நிறைவேற்றியதாக அமைவதோடு நபியவர்களின் வழிகாட்டலைப் பின்பற்றிய நன்மையையும் பெற்றுத் தருகின்றது.

எனவே, எம்மோடு நன்கு பழகுகின்ற ஆத்ம நண்பர்களாக இருந்த போதும் அவர்களுடைய வீடுகளுக்குச் செல்லும் போதும் நாம் ஸலாம் கூறி அனுமதி பெற்றுச் செல்கின்ற பழக்கத்தை உருவாக்கிக் கொள்வோம்.

இப்பழக்கம் எம்மைப் பற்றிய நல்லெண்ணத்தை அவர்கள் மீது மென்மேலும் உருவாக்கி எம்மீதான அன்பையும் அதிகரிக்கச் செய்யக் கூடியதாக இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவாலுக்கு சவால்

காலையில் ஆரம்பித்த உஹத் போர் பகலுடன் முடிவுக்கு வந்தது. இதில் முஸ்லிம்களுக்கு பெரிய சேதம் ஏற்பட்டது. முஸ்லிம்களின் படைகள் சிதறி ஓடினாலும் பின்னர் ஒன்றுதிரண்டனர். போர் நிறைவுற்று விட்டது தாம் வெற்றி பெற்றுவிட்டோம் என்று எண்ணி குறைஷிகள் மக்காவிற்குத் திரும்பத் தயாரானார்கள். ஆனாலும், அபூஸுப்யானுக்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் உயிருடன் இருக்கிறார்களா? இல்லையா? என்பதை உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும் போலிருந்தது.

இதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அவர் மலையின் மீது ஏறி முஹம்மத் உயிருடன் இருக்கிறாரா? என்று சப்தமாகக் கூவினார். நபியவர்கள் அதற்கு பதிலளிக்க வேண்டாம் என்று கூறினார்கள். எனவே முஸ்லிம்கள் அதற்கு பதிலளிக்கவில்லை. பின்பு உங்களில் அபூ குஹாஃபாவின் மகன் (அபூபக்ர்) இருக்கிறாரா? என்று வினவினார். அப்போதும் முஸ்லிம்கள் பதிலளிக்கவில்லை. பின்பு அவர் உமர் இப்னு கத்தாப் இருக்கிறாரா? என்று கேட்டார். அதற்கும் முஸ்லிம்கள் பதிலளிக்கவில்லை.

முஸ்லிம்களிடமிருந்து எந்த பதிலும் வராததால் என் மக்களே! அறிந்து கொள்ளுங்கள். இவர்களையே நீங்கள் கொன்று விட்டீர்கள் அது போதும்! என்று அபூ ஸுஃப்யான் கூறினார்.

இதைக் கேட்ட உமர் (ரழியல்லாஹு அன்ஹு) தன்னை அடக்க முடியாமல் ஏய்! அல்லாஹ்வின் எதிரியே! நீ யாரையெல்லாம் கூறினாயோ அவர்கள் உயிரோடு தான் இருக்கிறார்கள். அல்லாஹ் என்றும் உனக்குக் கவலையைத் தான் தருவான். எனவே, நீ மகிழத்தேவையில்லை என்று பதிலளித்தார்கள். சிறிது நேரத்திற்குப் பிறகு அபூ ஸுஃப்யான் மீண்டும் பேசினார். உங்களில் கொல்லப்பட்டோரின் உடல்கள் சிதைக்கப் பட்டுள்ளன. அப்படிச் செய்ய வேண்டுமென நான் கட்டளையிடவில்லை. ஆனாலும், அது எனக்கு எந்த வருத்தத்தையும் அளிக்கவில்லை என்றார். பின்பு ஹுபுல் எனும் சிலையே! உயர்வு உனக்குத்தான் என்று கூறினார்.

அதைக்கேட்ட நபி (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்கள் இப்போது நீங்கள் அவருக்கு பதிலளிக்க மாட்டீர்களா? என்று கேட்க, நாங்கள் என்ன பதிலளிக்க வேண்டும்? என்று ஸஹாபாக்கள் கேட்டனர். அதற்கு அல்லாஹ் தான் உயர்ந்தவன் அவனே கண்ணியமிக்கவன் என்று பதிலளியுங்கள் என்று நபியவர்கள் கூறினார்கள். அவர்களும் அவ்வாறே பதிலளித்தார்கள்.

பின்பு எங்களுக்கு உஸ்ஸா இருக்கிறது. உங்களுக்கு உஸ்ஸா இல்லையே! என்றார் அபூஸுஃப்யான்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அவருக்கு நீங்கள் பதிலளிக்க மாட்டீர்களா? என்று கேட்க நாங்கள் என்ன பதிலளிப்பது? என்று நபித்தோழர்கள் கேட்டனர், அல்லாஹ் எங்களுக்கு எஜமானாக இருக்கிறான். உங்களுக்கு எஜமானன் இல்லையே! என பதிலளியுங்கள் என்றார்கள். நபித்தோழர்களும் அவ்வாறே கூறினார்கள்.

அதன் பிறகு, எவ்வளவு மகிழ்ச்சியான செய்தி. இந்நாள் பத்ர் போருக்குப் பகரமாக ஆகிவிட்டது. போர் இப்படித் தான் கிணற்று வாளியைப் போன்றது என்றார் அபூஸுஃப்யான்.

அதற்கு உமர் (ரழியல்லாஹு அன்ஹு) ஒருபோதும் சமமாக முடியாது. எங்களில் கொல்லப்பட்டவர் சுவனத்தில் இருக்கிறார். உங்களில் கொல்லப்பட்டவர் நரகத்தில் இருக்கிறார் என்று பதிலடி கொடுத்தார்கள்.

பின்பு அபூஸுஃப்யான் உமரே! என்னிடம் வா என்று அழைத்தார். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் உமரே! நீ அவரிடம் சென்று அவர் என்ன கூறுகிறார் என்று கேட்டு வாருங்கள் என்றார்கள்.

(20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY JAFFNA

ஆலிப் அலி (இஸ்லாஹி)
www.aliaalif.tk

ஜெலி மீன்கள்

Jelly Fishes



அண்மையில் களனி, பயகம வோட்டர் வேல்ட் காட்சியகத்திற்கு ஒரு மினி சுற்றுலா செல்லக்கிடைத்தது. அழகழகான கடல்வாழ் மீனினங்களின் பலதரப்பட்ட மீன் வகைகள் அங்கே தொட்டிகளில் காட்சிப்படுத்தியிருந்தனர். இறைவனின் படைப்புகளின் அழகையும் வனப்பையும் கண்டு பிரம்மித்துப் போனேன். அவனது படைப்புகளின் வரிசையில் காணக்கிடைத்த ஒரு விநோதமான, வித்தியாசமான உயிரினம்தான் ஜெலி மீன்கள். ஜெலி மீன் தொட்டிக்கு அருகாமையில் தொங்கவிடப்பட்டிருந்த விவரணப் பலகையின் வாசகங்கள் தான் இத்தொடரில் ஜெலி மீன்கள் பற்றி என்னை எழுதத் துண்டியது.

ஜெலி மீன் "Jelly fish" என ஆங்கிலத்திலும் "சொறிமுட்டை" என தமிழிலும் அழைக்கப்படுகின்றன. இவை க்நிடேரிய (Cnidaria) உயிரினத் தொகுதியைச் சேர்ந்த ஒரு கடல் வாழ் உயிரினமாகும். இவை கடலின் ஆழமான பகுதிகளில் மட்டுமல்லாது கரைப் பகுதிகளிலும் வாழும் தன்மை கொண்டவை. அவை கரையில் ஒதுங்கிக் கிடக்கும் போது பார்வைக்கு மிக அழகாகத் தென்பட்டாலும் தீங்கு விளைவிக்கும் செயல்களையும் செய்கின்றன. இது வரை 2000 க்கும் மேற்பட்ட ஜெலி மீன் இனங்கள் உள்ளதாக அறியப்பட்டுள்ளன. இவை கூடுதலாக கடலின் ஆழத்தில் உலவும் பண்பு கொண்டுள்ளதால் இன்னும் ஏராளமான இனங்கள் எமக்குப் புலப்படாமல் இருக்கலாமென ஆராய்ச்சியாளர்கள் ஊகிக்கின்றனர்.

உடலமைப்பு



இதன் உடல் தோற்றம் விசித்திரமாக உள்ளது. தலைப்பகுதி குடை வடிவத்திலும் அதன் கீழாக கைப்பிடி போன்று நீண்ட வால் பகுதி ஒன்றும் உள்ளது. வால் பகுதியின் நுனியின் ஒரு துளையில் வாயும் மற்றொரு துளையில் கழிவு நீக்கும் உறுப்பும் அமைந்துள்ளது. குடை போன்று அமைந்துள்ள தலைப் பகுதியின் ஓரம் எட்டு மடல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இம்மடல்களுக்குக் கீழாக உணர்கொம்புகள் (Tentacles) நிறைந்துள்ளன. குடைப் பகுதியின் விளிம்பில் ஏராளமான குழல் போன்ற நூல்கள் அமைந்துள்ளன. இவை உணவைப் பற்றுவதற்கும் வாயினருகில் கொண்டு செல்வதற்கும் உதவுகின்றன.

ஜெலி மீன்களுக்கு மூளையோ, இதயமோ, எலும்புகளோ, இரத்தமோ ஏன் கண், காதுகளோ காணப்படுவதில்லை. இறைவனின் படைப்புகளிலே மிகவும் வித்தியாசமான படைப்பு என்று கூறியது இதனால்தான். அவன் அல்-முஸவ்விர், படைப்புகளை அவன் தன் இஷ்டப்படியெல்லாம் படைக்கக்கூடிய பேராற்றல் படைத்தவன். ஜெலி மீன்களின் மொத்த உடற் பகுதியில் 95% ஆன பகுதி நீராலும் மீதி 5% வீதமும் திடப்பொருளாலும் அமைந்துள்ளது. உடலில் இளையோடியிருக்கும் நரம்புகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒளி, மணம், நீரின் அழுத்தம் மற்றும் வேறு தூண்டல்களை உணரும் உணர் நரம்புகளாகத் (Nerve Receptors) தொழிற்படுகின்றன. இந்த உணர் நரம்புகளை வைத்தே இவை சுழலை அறிந்து உணர்ந்து கொள்கின்றன.

இவற்றின் உடல் ஒளி ஊடுருவக்கூடிய விதத்தில் அமைந்திருக்கும். எனவே தண்ணீரில் இருந்தாலும் இவை இருப்பதை சரியாகக் கவனிக்க முடியாது. இது எதிரி விலங்குகளிடமிருந்து இவற்றுக்குப் பாதுகாப்பையும் தமது உணவான சிறு மீன்களை இலகுவாகப் பிடித்துண்ண வசதியையும் ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

ஜெலி மீன்கள் பல்வேறு வடிவங்களிலும் பல்வேறு அளவுகளிலும் பல வண்ணங்களிலும் காணப்படுகின்றன. இவற்றின் அளவுப் பரிமாணம் சில மீன்கள் ஒரு சென்றி மீட்டர் அளவாகவும் இன்னும் சிலவை ஏழு அடிகள் வரை பெரிதாகவும் காணப்படும். பெரிய மீன்களின் உணர்கொம்புகளும் மிக நீளமாக இருக்கும். இவ்வகை பெரிய ஜெலி மீன்கள் ஜப்பான், ஆப்பிரிக்க கடல்களிலும், கருங்கடல், கஸ்பியன் கடல், மத்திய தரைக் கடற்பகுதிகளிலும்தான் அதிகம் வாழ்கின்றன.

ஜெலி மீன்கள் செங்குத்தாக கீழ் நோக்கியும் மேல் நோக்கியும் நகர்வதோடு அலைகளின் அசைவுக்கும் நீரோட்டத்திற்கும் ஏற்ப இரு பக்கங்களுக்கும் நகர்கின்றன. அதன் குடை போன்றிருக்கும் பகுதியைச் சுருக்கி மீண்டு உந்தித் தள்ளி விரிப்பதால் இவை உந்தப்பட்டு நீரிலே நீந்துகின்றன. இவற்றால் விரைவாக நீந்த முடியாது. எனவே மெதுவாக சாந்தமாகத்தான் கடல் நீரில் நீந்திக்கொண்டிருக்கும்.

உணவு முறை

இது நீரில் மிதந்து கொண்டிருப்பது பெரும்பாலும் கண்களுக்குப் புலப்படாது. அமைதியாக மிதந்து செல்லும். அவ்வேளை சிறு மீன் போன்ற உயிரினங்கள் ஏதும் வந்து உணர் கொம்புகளில் பட்டுவிட்டால் உடனே உணர்கொம்புகளில் நீண்டிருக்கும் நூல்களை வெளியே வீசி இரையை மடக்கிச் சிக்கவைத்து விடுகிறது. இவ்வுணர்கொம்பில் உள்ள நச்சுகள் இரையைச் செயலிழக்கச் செய்துவிடுகின்றன. பின்னர் இரையானது சமிபாட்டுக் குழாயில் செலுத்தப்பட்டு சமிபாடடைகிறது. சிலவகை மீன்களிடம் சிறிதளவில் மின்சார சக்தியும் உண்டு. உணவின் மீது மின்சாரத்தைப் பாய்ச்சி கொன்றுண்ணும் வழக்கமும் உண்டு. உணர் கொம்புகளை ஜெலி மீன்கள் வேட்டையாடுவதற்குப் பயன்படுத்துகின்றன. சில நேரங்களில் அவை தம்மைப் பாதுகாக்கவும் பயன்படுத்திக் கொள்கின்றன.

இனப்பெருக்க முறை



இம்மீன்கள் தமக்கிடையே நுட்பமான தொடர்பாடல் முறைகளைக் கைக்கொள்கின்றன. அமைதியாக இருக்கும் நீர்ப் பரப்பில் திடீரென பல நூறு ஜெலி மீன்கள் கூட்டமாக ஒன்று சேரும். அப்போது பெரும்பாலும் அக்கூட்டதில் 100 இலிருந்து 1000 வரையான மீன்களைக் காணலாம்.

ஆண் மீன் தனது உயிரணுவையும் பெண் மீன் தனது சினை முட்டையையும் தண்ணீரில் விட்டுவிடுகின்றன. நீரில் விடப்பட்ட முட்டைகள் ஒன்றுடன் ஒன்று இணைந்து கருக்கட்டுகின்றன. அதற்கு "ப்லானுலே (Planulae) (லாரசுவா பருவம்)" என்று பெயர். இப்பருவத்தில் அவை தரையை நோக்கி பயணித்துப் பாறைகளில் தொற்றிக் கொள்கின்றன. இப்பருவத்திற்கு "பாலிப்" என்று பெயர். இப்போது அது கடல் பாசித் தாவரம் போல் பாறையில் மெது மெதுவாக வளர்கின்றது. சில நாட்களில் நன்கு வளர்ந்து பாறைகளில் இருந்து விலகி நீந்தக்கூடிய ஜெலி மீன்களாக மாறுகின்றன. (படத்தைப் பார்க்க) அனேகமாக இவற்றின் ஆயுட்காலம் ஆறு மாதங்களாகவே இருக்கும்.

(19ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றாட வாழ்வில் اللغة العربية

அரபு மொழி

தொடர்:



அஷ்ஷெய்க் யூ.எல்.எம். ரிஸ்மி (நளீமி)

போது - لَمَّا

1. رَنَّ جَرَسُ الْمَدْرَسَةِ

பாடசாலை மணி ஒலித்தது.

لَمَّا رَنَّ جَرَسُ المَدْرَسَةِ دَخَلَ التَّلَامِيْذُ الصَّفَّ

பாடசாலை மணி ஒலித்த போது மாணவர்கள் வகுப்பில் நுழைந்தனர்.

2. نَجَحَتْ فَاطِمَةُ فِي الإِمْتِحَانِ

பாத்திமா பரீட்சையில் சித்தியடைந்தாள்.

حَصَلَتْ عَلَى هَدِيَّةٍ مِنْ وَالِدِهَا

தனது தந்தையிடமிருந்து பரிசொன்றைப் பெற்றுக் கொண்டாள்.

لَمَّا نَجَحَتْ فَاطِمَةُ فِي الإِمْتِحَانِ حَصَلَتْ عَلَى هَدِيَّةٍ مِنْ وَالِدِهَا

பாத்திமா பரீட்சையில் சித்தியடைந்த போது தனது தந்தையிடமிருந்து பரிசொன்றைப் பெற்றுக் கொண்டாள்.

3. وَصَلَ الضَّيْفُ إِلَى بَيْتِنَا

விருந்தாளி எமது வீட்டுக்கு வந்தடைந்தார்.

قَدَّمْتُ لَهُ الحَلْوَى

அவருக்கு இனிப்புப் பண்டம் வழங்கினேன்.

لَمَّا وَصَلَ الضَّيْفُ إِلَى بَيْتِنَا قَدَّمْتُ لَهُ الحَلْوَى

விருந்தாளி எமது வீட்டுக்கு வந்த போது அவருக்கு இணிப்புப்பண்டம் வழங்கினேன்.

4. اِنْتَهَتِ الحِصَّةُ

பாடவேளை முடிவுற்றது.

خَرَجَ المُدَرِّسُ مِنَ الصَّفِّ

ஆசிரியர் வகுப்பிலிருந்து வெளியேறினார்.

لَمَّا انْتَهَتِ الحِصَّةُ خَرَجَ المُدَرِّسُ مِنَ الصَّفِّ

பாடவேளை முடிவுற்ற போது ஆசிரியர் வகுப்பிலிருந்து வெளியேறினார்.

பின்வரும் வசனங்களை இணைத்து எழுதுக.

1. حَضَرَ الأُسْتَاذُ

ஆசிரியர் வந்தார்.

وَقَفَ التَّلَامِيْذُ

மாணவர்கள் எழுந்து நின்றனர்.

....

2. نَزَلَتِ الأَمْطَارُ

மழை பொழிந்தது

دَخَلْنَا تَحْتَ المِظَلَّةِ

நாம் குடைக்குள் நுழைந்து கொண்டோம்.

....

3. تَأَخَّرَتِ الحَافِلَةُ

பஸ்வண்டி வருவதற்குத் தாமதித்தது.

حَضَرْتُ بِالْقِطَارِ

புகையிரதத்தில் வந்து சேர்ந்தேன்.

....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதியவர் யார்?

நளவெண்பா	புகழேந்திப் புலவர்
விடியுமா?	கு.ப. ராஜகோபாலன்
நாலடியார்	நானூறு சமண முனிவர்கள்
பழமொழி நானூறு	மூன்றுறை அரையனார்
நான்மணிக்கடிகை	விளம்பிநாகனார்
வாக்குண்டாம், நல்வழி	ஔவையார்
கவிச்சக்கரவர்த்தி	கு. அழகிரிசாமி
நல்லமரமும் நச்சுமரமும்	ரா.பி. சேதுப்பிள்ளை
மங்கையர்க்கரசியின் காதல்	வா.வே.சு. ஐயர்
கல்வியே அழியாச் செல்வம்	மறைமலை அடிகளார்
ஒரு பதிவிரதை சரித்திரம்	அட்டாவதானம் வீரசாமிச் செட்டியார்

எப். ஹப்ஸா அத்தாஸ்
தரம் - 11
மடிகே மு.ம.வி
தெத்ததிலியங்க.

இலங்கை பற்றிய தகவல்கள் சில...

1. இலங்கை குடியரசானது எப்போது?
   1972.05.22
2. இலங்கையின் மாவட்ட நிருவாக சபைகளின் எண்ணிக்கை எத்தனை?
   234
3. இலங்கையின் தேர்தல் பிரிவுகளின் எண்ணிக்கை எத்தனை?
   160
4. இலங்கையின் பிரதேச செயலாளர் பிரிவுகள் எத்தனை?
   256
5. இலங்கையின் பாராளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை எத்தனை?
   225
6. இலங்கையின் நீள, அகலம் எவ்வளவு?
   நீளம் 447 km, அகலம் 219 km
7. இலங்கையின் வெண்கல மாளிகை எங்கு உள்ளது?
   அநுராதபுரத்தில்
8. இலங்கையின் முதலாவது ஜனாதிபதி யார்?
   வில்லியம் கொபல்லாவ
9. இலங்கையில் பால்மாத் தொழிற்சாலை அமைந்துள்ள இடங்கள் எவை?
   அம்பேவெல, வெலிசற
10. இலங்கை முழுவதும் புதிய கல்விச் சீர்திருத்தம் கொண்டுவரப்பட்ட ஆண்டு எது?
   1999 இல்



அப்துல் மஜிட் இல்மியா
தரம் 11
அஷ்ரப் மத்திய கல்லூரி
இறக்காமம்.

1. *நவீன ஒலிம்பிக் போட்டிகள் எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது? கி.பி. 1896*
2. *2008 ஆம் ஆண்டு எத்தனையாவது ஒலிம்பிக் போட்டி நடத்தப்பட்டது? 29 ஆவது*
3. *சீனாவின் பீஜிங் ஒலிம்பிக் விளையாட்டுச் சின்னம் எது? பண்டா*
4. *கிரேக்கர்களின் ஒலிம்பிக் விளையாட்டின் வீரக்கடவுள் யார்? சியஸ்*
5. *ஒலிம்பிக் கொடியில் காணப்படும் ஐந்து வளையங்களும் எதனைக் குறிக்கின்றன? கண்டங்களைக் குறிக்கின்றன.*

எம்.என்.எப். நிஸ்மா, தரம் 6
பத்ரியா ம.க.
மாவனல்லை.

உங்களுக்குத் தெரியுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஹம்மத் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின்

வாழ்க்கை வரலாறு

முஹம்மத், கெகிராவ — ஆரம்ப அறிமுகம் : வினா விடை

1. இவ்வுலகிற்கு எத்தனை நபிமார்கள் அனுப்பப்பட்டார்கள்?
   ஏறத்தாள ஒரு இலட்சத்து இருபத்தி நான்காயிரம் (124,000) நபிமார்கள் இவ்வுலகிற்கு அனுப்பப்பட்டனர்.
2. முதலாவதாக அனுப்பப்பட்ட நபியினதும், இறுதியாக அனுப்பப்பட்ட நபியினதும் பெயர்கள் என்ன?
   முதலாவதாக அனுப்பப்பட்ட நபி ஆதம் (அலைஹிஸ்ஸலாம்). இறுதியாக அனுப்பப்பட்ட நபி முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்).
3. நபி முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு முன்னர் அனுப்பப்பட்ட நபியின் பெயர் என்ன?
   நபி ஈஸா (அலைஹிஸ்ஸலாம்)
4. நபி முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கும் நபி ஈஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுக்கும் இடைப்பட்ட காலம் எத்தனை வருடங்கள்?
   ஏறத்தாள 570 வருடங்கள்
5. நபி என்பவருக்கும் ரஸூல் என்பவருக்கும் இடையிலுள்ள வித்தியாசம் என்ன?
   புதிய ஷரீஅத் கொடுக்கப்பட்டு எவருக்கு வேதமும் கொடுக்கப்பட்டதோ அவர் ரஸூல் ஆவார். எவருக்கு இவை கொடுக்கப்படவில்லையோ அவர் நபியாவார். நபி எனும் சொல் பொதுவானது. புதிய ஷரீஅத் வழங்கப்பட்டாலும் சரி ரஸூல் என்பவர் எப்போதும் நபியாகவும் இருப்பார். எனினும் ரஸூல் எனும் பதம் புதிய ஷரீஅத் வழங்கப்பட்டவர்களுக்கு மாத்திரமே பிரயோகிக்கப்படும்.

முஹம்மத் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் பிறப்பு

1. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் எங்கே பிறந்தார்கள்? மக்காவில்
2. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பிறந்த திகதி என்ன? கி.பி. 571 இல் ஏப்ரல் மாதம் 20 அல்லது 22ம் திகதி திங்கட்கிழமை (ரபிஊல் அவ்வல் மாதம் பிறை 9 இல்) பிறந்தார்கள்.
3. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு முதலாவதாக வைக்கப்பட்ட பெயர்கள் என்ன? அப்பெயர்களை சூட்டியவர்கள் யார்?
   முஹம்மத் என பாட்டனார் அப்துல் முத்தலிபும் அஹ்மத் என தாயாரும் பெயர் சூட்டினார்கள்.

என் வெற்றிச் சுடர்கள்

இறைஞானம்	என் மூலதனம்
பகுத்தறிவு	என் வேர்
அன்பு	என் அடிப்படை
ஆர்வம்	என் குதிரை
தியானம்	என் தோழன்
உறுதி	என் உடைமை
அறிவு	என் ஆயுதம்
பொறுமை	என் போர்வை
திருப்தி	என் வெற்றிப் பொருள்
ஏழ்மை	என் பொறுமை
தியாகம்	என் கலை
தன்னம்பிக்கை	என் வல்லமை
உண்மை	என் வழிகாட்டி
பணிவு	என் நிறைவு
போராட்டம்	என் பிறவிக்குணம்
இறைவணக்கம்	என் இன்பம்

பிலால் பாத்திமா மின்ஹா
பாத்திமா ஸஹ்ரா ம.அ.க, ஓட்டமாவடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்டவெளி பற்றிய தகவல்கள்

- இலட்சக்கணக்கான விண்மீன்கள் அடங்கிய கூட்டத்திற்கு, அண்டம் (Galaxy) எனப்படும்.
- நமது அண்டத்தின் பெயர் பால்வெளி (Milky way)
- இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட அண்டங்களின் எண்ணிக்கை, 30,000 ஆகும்.
- நமது அண்டத்திற்கு மிக அருகிலுள்ள அண்டத்தின் பெயர், அன்ட்ரோமெடா (Andro meda) ஆகும். இது 20 இலட்சம் ஒளி ஆண்டு தொலைவிலுள்ளது.
- விண்மீன் போன்றே காட்சி தரும் வாள்வெளிப் பொருள், க்யூசார். இதுவரை 1500 க்யூசார் கண்டுபிக்கப்பட்டுள்ளது.
- இதுவரை 80 லட்சம் அண்டங்கள் உள்ளதாக உறுதி செய்யப்பட்டுள்ளன.
- ஒவ்வொரு அண்டத்திலும் 14,000 கோடி நட்சத்திரங்கள் வீதமுள்ளன.
- பால்வெளி மண்டலத்திலுள்ள சூரியன் ஒரு நட்சத்திரம் (விண்மீன்) ஆகும்.

ஏ.எச். அப்துல்லாஹ்
தரம் - 5
கமு/ அல்மிஸ்பாஹ் மஹா வித்தியாலயம்,
கல்முனை.

சர்வதேச குறியீடுகள்

வெள்ளைப் புறா	- சமாதானம்
ஒலிவ் இலை	- சமாதானம்
சக்கரம்	- வளர்ச்சி
தாமரை	- பண்பாடு
கறுப்புக் கொடி	- எதிர்ப்பு/மறுப்பு
இரு எலும்புகளின் நடுவே மண்டையோடு	- ஆபத்து
சிவப்பு விளக்கு	- ஆபத்து
செஞ்சிலுவை	- மருத்துவமனை
கறுப்புத் துணி	- துக்கம்
கையில் தராசு ஏந்தி கண் கட்டப்பட்ட பெண்	- நீதி
சிவப்புக் கொடி	- புரட்சி
அரைக்கம்பக் கொடி	- துக்கம்
மேல்நோக்கி செங்குத்துக் கொடி	- வெற்றி
வெள்ளைக் கொடி	- சமாதானம்
மஞ்சள் கொடி	- தொற்றுநோய்

எம்.எச்.எப். நிஸ்பா ஹுசைன்
க/தெநு/ அம்பகஸ்தன்னை மு.வி.
வெலம்பொட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் அகரம்

உலகில் மிகப் பெரியவை

- பாலைவனம் - சஹாரா
- சமுத்திரம் - பசுபிக் சமுத்திரம்
- தீவு - கிறீன்லாந்து
- அகலமான நதி - அமேசன்
- பெரிய நாடு - ரஷ்யா
- கண்டம் - ஆசியா
- நீர் வீழ்ச்சி - நாயகரா
- சனத்தொகை கூடிய நாடு - சீனா
- நீளமான நதி - நைல் நதி
- ஜனநாயக நாடு - இந்தியா

எம்.எச்.எப். அஷ்ரா, தரம் 9
மாவடல்போவ மு.ம.வி

உங்களுக்குத் தெரியுமா?

- சூரிய மையக் கொள்கையை நிரூபித்தவர் நிக்கலஸ் கொப்பர்னிக்கஸ். இவர் பிறந்த நாடு போலாந்து.
- சூரியனின் கீழ்ப்பகுதியை ஆராய்ச்சி செய்ய நாஸா நிறுவனத்தினால் அனுப்பப்பட்டுள்ள செய்மதியின் பெயர் IRIS (2013 ஆண்டு)
- செவ்வாய்க் கிரகத்திற்கு அமெரிக்காவின் நாஸா நிறுவனம் ஆராய்சிகளுக்காக அனுப்பியுள்ள ஆய்வு கூடம் 'கியீரியோசிடி' ஆகும்.
- விண்வெளியில் எழுதி விண்வெளியில் பாடப்பட்ட முதலாவது பாடல் கனடா நாட்டைச்சேர்ந்த விண்வெளி வீரரான கிறிஸ் ஹட்ஃபீல்ட் என்பவரால் மேற்கொள்ளப்பட்டது.
- உலக மக்களின் சனத்தொகை சுமார் 700 கோடி. அதில் முஸ்லிம்களின் தொகை 161.9 கோடி
- உலகில் மிகக்கூடிய முஸ்லிம்கள் வாழும் நாடு இந்தோனேசியா. அங்கு சுமார் 20.4 கோடி முஸ்லிம்கள் வாழ்கின்றனர்.
- உலகில் மிகப்பெரிய பிரமாண்டமான கப்பலாக மார்க்கோ போலோ என்ற கப்பல் திகழ்கின்றது. இதனது வெள்ளோட்டம் 2012 ஆண்டு நிகழ்த்தப்பட்டது.
- கொழும்பு ஸாஹிரா கல்லூரி நிறுவப்பட்டது 1892 ஒகஸ்ட் 22 ஆம் திகதி ஆகும்.
- 19, 20, 21 ஆகிய மூன்று நூற்றாண்டுகளிலும் வாழும் இலங்கைப் பெண் மாவனல்லையைச் சேர்ந்த அபுலன்னதா உக்கு அம்மா (பிறப்பு 1897, வயது 116)

எம்.டி.எப். அஸ்மா, தரம் - 07
முஸ்லிம் மகளிர் கல்லூரி, கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1971இல் ஆரம்பிக்கப்பட்ட பொதுநலவாய அரச தலைவர்களின் மாநாடு 2013 அதாவது, இவ் வருடம் தனது 23 ஆவது அத்தியாயத்தில் காலடி வைத்திருக்கிறது. அதுவும் எமது தாய்த் திரு நாடான இலங்கையில் நடைபெற்றமை முக்கிய அம்சமாகும். இலங்கை வரலாற்றில் முதன் முறையாகவும் ஆசிய வரலாற்றில் ஆசிய நாடொன்றில் 24 வருடங்களின் பின்னரும் ''சமத் துவமான அபிவிருத்தியை நோக்கிய வளர்ச்சி'' என்னும் தொனிப் பொருளுடன் இம்மாநாடு கொழும்பில் இடம்பெற்றது. இப்பொதுநலவாய

23 ஆவது
பொதுநலவாய மாநாடு



முஹம்மத் இன்ஸமாம்
கிண்ணியா

மாநாட்டினை 2ஆம் எலிசபத் மகாராணி சார்பாக இளவரசர் சார்ள்ஸ் ஆரம்பித்து வைத்தார்.

53 நாடுகள் அங்கம் வகிக்கும் பொதுநலவாய அமைப்பின் 50 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் பங்குபற்றியிருந்தனர். இதன் போது 9 நாடு களின் ஜனாதிபதிகளும் 5 உப ஜனாதிபதிகளும் 17 பிரதமர்களும் 11 வெளிவிவகார அமைச்சர் களும் அரச தலைவர்களுக்கான மாநாட்டில் பங்குபற்றி இருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த மாநாட்டை இந்தியா, கனடா, மொரீஷியஷ் ஆகிய நாடுகள் புறக்கணித்திருந்தமை ஒரு கவ லைக்குரிய விடயமாகும்.

அரச தலைவர்களுக்கான மாநாட்டில் வறுமை ஒழித்தல் மற்றும் அபிவிருத்தியில் சமத்துவம் ஆகிய விடயங்கள் முதன்மைப்படுத்தப்பட்டது டன் 15 அம்சத் திட்டங்களை உள்ளடக்கிய கொழும்பு பிரகடனம் வெளியிடப்பட்டிருந்தது. அத்துடன் எதிர்வரும் ஈராண்டுகளுக்கு இலங்கை தலைமை தாங்குவது குறித்தும் அரச தலை வர்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

இளைஞர் மாநாடு

பொதுநலவாய அரச தலைவர்களின் மாநாட் டுக்கு முன்னரே பொதுநலவாய இளைஞர் அமைப்பு (Commonwealth Youth Forum) தனது கூட்டத் தொடரை ஆரம்பித்தது. நவம்பர் 10 தொடக்கம் நவம்பர் 14 வரை ஹம்பாந் தோட்டை ருஹுனு மாஹும்புர சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இதனது நிகழ்வுகள் இடம்பெற்றன. இதன் போது பொதுநலவாய நாடுகளின் முதலாவது இளைஞர் சபைக்கான அதிகாரிகள் தெரிவு செய்யப்பட்டனர். 9 பேரைக் கொண்ட இச்செயற் குழுவில் நான்கு பேர் இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பி டத்தக்கது. அவர்களின் பெயரும் பதவியும் பின்வருமாறு:

1. மொஹம்மட் ஹுஸ்னி - பிரதித் தலைவர்
2. சாதம் சாஜஹான் - பிரதித் தலைவர்
3. தாரிக்கா திலீபன் - பிராந்திய பிரதிநிதி
4. வத்சலா சமரகோன் - விருப்புப் பிரதிநிதி

இம்முறை உருவாக்கப்பட்ட முதலாவது இளைஞர் சபைக்கான தலைமையகம் ஹம்பாந் தோட்டையில் அமைக்கப்பட்டுள்ளது.

பொதுநலவாய வர்த்தக மாநாடு

இது நவம்பர் 12 தொடக்கம் 14 வரை கொழும்பு சினமன் கிரான் ஹோட்டலில் இடம் பெற்றது. இதன் போது பொதுநலவாய அமைப் பில் அங்கம் வகிக்கும் நாடுகளுக்கு மேலதிகமாக வேறு சில நாடுகளின் வர்த்தகப் பிரதிநிதிகளும் பங்குபற்றியிருந்தனர். மொத்தம் 83 நாடுகளைச் சேர்ந்த சுமார் 2000 பிரதிநிதிகள் இந்நிகழ்வில் பங்குபற்றியிருந்தனர்.

பொதுநலவாய மக்களவை மாநாடு

இது காலி, ஹிக்கடுவை சாயாடிரான்ஸ் ஹோட் டலில் இடம்பெற்றது. இதன் தலைவராக ஆனந்த் சத்யானந்தனும் உபகுழுத் தலைவராக டாக்டர் லலித் சந்ரதாஸவும் கடமையாற்றுகின்றனர்.

இதற்கு மேலதிகமாக பொதுநலவாய நாடு களின் அமைச்சர்களுக்கான மாநாடும் இடம் பெற்றிருந்தது. இது முக்கியமாக சிறிய நாடு களின் அமைச்சர்களை மையமாக வைத்து நடத் தப்பட்டது. இதில் இலங்கை சார்பாக வெளி விவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் கலந்து கொண்டிருந்தார்.

(20ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை

ஒரு பாதை மூலம் ஒருநாளில் அண்ணளவாக 2 மில்லியன் வருமானத்தை இலங்கை அரசு உழைத்தது என்றால் ஆச்சரியமாக உள்ளதா? ஆச்சரியப்படத் தேவையில்லை. அண்மையில் திறக்கப்பட்ட கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை மூலமே இவ் வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது.

2009 ஆகஸ்ட் 18இல் ஆரம்பமாகிய இந் நெடுஞ்சாலையின் கட்டுமானப் பணிகள் 2013 செப்டம்பரில் நிறைவடைவதாக திட்டமிடப்பட்டிருந்தது. பின் 2013 ஒக்டோபர் 27ஆம் திகதி அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால் இந் நெடுஞ்சாலை கோலாகலமாக திறந்து வைக்கப்பட்டது.

25.8 கி.மீ நீளமுடைய இலங்கையின் 2வது "E03" தர அதிவேக நெடுஞ்சாலையான இப் புதிய பாதை புதிய களனி பாலத்தில் ஆரம்பமாகி கொழும்பு மற்றும் கட்டுநாயக்க விமான நிலையத்தை இணைப்பதுடன் நீர்கொழும்பு - கொழும்பு A-3 வீதியில் மாபோல எனும் இடத்தில் ஊடறுக்கிறது.

248.2 மில்லியன் அமெரிக்க டொலர் சீன உதவியுடனும் 292 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந் நெடுஞ்சாலையில் 48 பாளங்கள் மற்றும் 88 மதகுகள் போன்ற அடங்குகின்றன.

அதேபோன்று நவீன வசதிகள் பலவும் இந் நெடுஞ்சாலையில் இணைக்கப்பட்டுள்ளன.

- CKE தீயணைப்புப் படை, பொலிஸ் படை
- CC TV கெமரா
- ஒலி மாசடைவதைத் தடுப்பதற்கான 3.56 கி.மீ இடைவெளியில் தடுப்புக்கள்
- இலத்திரன் பண அறவீட்டு முறை
- அவசர அழைப்புக்களை மேற்கொள்ள 500 மீ. இடையில் தொலைபேசி வசதிகள்
- சாரதிகளுக்கான தகவல் அடங்கிய கணினி மயப்படுத்தப்பட்ட விளம்பரப் பலகை

போன்றன முக்கிய அம்சங்களாகும்.

அண்ணளவாக 1 மணித்தியாலம் 30 நிமிடங்கள் எடுத்த கொழும்பிலிருந்து கட்டுநாயக்க செல்வதற்கு செலவிடப்பட்ட நேரமானது 20 நிமிடமாக சுருக்கப்பட்டுள்ளமை பலரது கவனயீர்ப்புக்கு முக்கிய காரணமாகும்.

வாகன நெரிசல்களால் ஏற்படும் அசௌகரியங்களை தவிர்ப்பதற்கும், பேலியகொட- புத்தளம் A-3 வீதியை மாற்று வீதியாக பயன்படுத்தவும், கொல்களன் தேவை கொண்ட கைத்தொழில் அபிவிருத்தி பகுதிகளை அடைவதற்கான வசதிகளை மேம்படுத்தவும் இப்புதிய நெடுஞ்சாலை வழியமைத்துள்ளது.

இந் நெடுஞ்சாலை இலங்கை மக்களது புதிய வாழ்க்கைக்கான புதிய பாதை திறந்துள்ளதுடன் இம்முதலீடு குறித்து எதிர்மறையான கருத்துக்களும் பல மட்டங்களிலும் முன்வைக்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

HOW MUCH DO YOU KNOW?

Assalamualaikum dear friends

This is an exam month for some,
And the rest will have some fun
But the best ones will give some time
To make the new year fine!

So friends , I thought of featuring some 'home gardening' tips this time.

Sulaiman has a beautiful home garden. He is a school boy of fifteen, and he thinks his hobby is an AWESOME one !

Sulaiman has

1. **Flower plants**
2. **Herbal plants and**
3. **Vegetable plants**

In his garden.



He has separated the small area around his home into sections and fenced them with coconut peels. He and his family work together in the garden every mornings and evenings.

- They bring new plants from their friends, neigbours and shops.
- They place them in the garden with love and care.
- They water the plants.
- They make their own compost fertilizer in a bin.

Sulaiman says

"Mother is interested in the vegetables section. We have a variety of green leaves, and she prepares at least one of them for lunch. Sister loves the roses. She adds egg shells to get strong flowers. Dad helps me in making fences, and other arrangements."

It has turned out to be a wonderful hobby for this family. WELL DONE GUYS !

What are the things you need?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Try to name these things !



Growing Roses- Tips

Growing roses requires no gardening skills or experience. Essentially, there are three easy steps:

1. Choose the right rose for your space
2. Buy potted roses
3. Plant your rose where it will get at least six hours of sun each day
4. Water regularly

To provide care for your roses and ensure you get the most out of your roses, there are a few simple steps you can take to have a beautiful and easy-to-enjoy garden.

- Feed regularly
- Prevent pests
- Prune to promote blooms



YOUR CORNER

THE I'TIKAF

I'tikaf literally means staying in a place. In shari'ah ,it is staying in a mosque for a certain number of days,especially the last ten days of Ramadan.It was the practice of the Prophet (sal) to spend several days and nights during Ramadan in the mosque,devoting himself to prayer and meditation , to the exclusion of all worldly activities. It is a recognized sunnah of the Prophet and it has become an optional mode of devotion among Muslim. The main purpose of I,tikaf is to seclude oneself from all worldly activities,and devote one's whole time and energy to the remembrance of Allah

Salman Nazeer
Grade-08
Wisdom International School

Psychologists say....

1. If a person laughs too much even at stupid things, he is lonely deep inside.
2. If a person sleeps a lot , he is sad.
3. If a person speaks less, but speaks fast, he keeps secrets
4. If someone can't cry, he is weak.
5. If someone eats in an abnormal manner, he is tense
6. If someone cries on little things he is innocent and soft hearted.

Try to understand people more

Compiled by

McSajeea
2015 A/Level Batch
Mahmud Ladies College, Kalmunai

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



SOME VALUABLE THOUGHTS

1) Fear kills more people than death. Death kills only once in life, but fear kills many times.
2) It's EASY to talk but DIFFICULT to control the tongue; It's EASY TO HURT A PERSON WITH YOUR TONGUE BUT difficult to heal the world.
3) Give your full love to kids. Kids who know they are loved surely love others. Love is the best asset you can give them.
4) Don't give up just because something you planned failed to succeed. Make a better plan next time based on your earlier failures.
5) Bad habits enter you without any difficulty. But when such habits accumulate, they become granite hard to break.

A.R.FATHIMA NADHA
Grade:-06
Akk / Muslim C .College.(N/S)
Akkaraipattu

PUBLIC LIBRARY
JAFFNA

The day of Judgment

Some day we will die and leave everything on this earth behind. Long we may live but life on earth is short. One day this world we live in will also end. Then every one of us will stand before Allah to be judged. Allah is the master of the Day of Judgment.

Onethe Day of Judgment every deed of ours shall find its full reward. The reason for gibing this great importance to the life after death is clear.

This belief urges man to do noble deeds and stops him from doing sinful things. Those who do not believe in the life after death, live far form Allah, nothing can stop them from being cruel and sinful.

A.A.F.Athifa
Grade 5
High Line International School,
Muruthagahamulla

I'm eagerly waiting for your contributions with comments, stories poems and essays. The best ones will be published insha Allah.
So write to me at

I learn every day

A 61/ 5 ,
Zahira Road, Mawanella

Or

Mail me to
aharamenglish@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

வரலாறு

கலாநிதி கே.எம்.எம். இக்பால்

1. ஜேர்மனியை ஐக்கியப்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்த மூவரை அடைப்புக்குள்ளிருந்து தெரிவு செய்க.

(மெட்டநிக், கரிலால்டி, கவுன்கவூர், நெப்போலியன், பிஸ்மார்க்)

2. இத்தாலியை ஐக்கியப்படுத்துவதற்கு நெப்போலியன் மேற்கொண்ட நடவடிக்கைகள் 4 தருக.

3. ரஷ்யப் புரட்சியின் விளைவுகள் இரண்டை விளக்குக.

4. பிரான்சியப் புரட்சிக்கான காரணங்கள் மூன்றை விளக்குக.

விடைகள்

1. மெட்டநிக், நெப்போலியன், பிஸ்மார்க்

2. i. 1797இல் சிற்றரசுகளாக விளங்கிய நேபிள்ஸ், ஜினோவா, லொம்பாடி ஆகிய பிரதேசங்களை ஒன்றிணைத்தார்.

   ii. சிசிலி தீவை தனது அரசுடன் இணைத்தார்.

   iii. அவர் அறிமுகப்படுத்திய நெப்போலியச் சட்டம் இத்தாலிய மக்கள் ஐக்கியமடைவதற்கு உதவியது.

   iv. 1807இல் பாப்பரசரின் ஆதிக்கத்திலிருந்து வட இத்தாலியை விடுவித்தார்.

3. சர்வதிகார ஆட்சி முடிவுக்கு வந்தது.

ரஷ்யாவில் சார்மன்னர்கள் சர்வதிகார ஆட்சி நடத்தினார்கள். இரண்டாம் அலெக்சாண்டர் மன்னனும் மூன்றாம் அலெக்சாண்டர் மன்னனும் கொடுங்கோல் ஆட்சி நடத்தினார்கள். இவர்கள் அரசாங்கத்தை விமர்சித்தவர்களையும் ஆட்சிக்கு எதிராக கூட்டங்களை கூட்டியவர்களையும் கைது செய்து சிறையில் அடைத்தனர். தொழிலாளர்களது உரிமைகளை நசுக்கினர். இதன் காரணமாக தொழிலாளர்கள் சர்வதிகார ஆட்சிக்கு எதிராக புரட்சி செய்தார்கள். இதனால் 1917.03.15ஆம் திகதி ரஷ்யாவில் சர்வாதிகாரம் முடிவுக்கு வந்தது.

பொதுவுடமை ஆட்சி ஏற்பட்டது.

உலகில் பொதுவுடமைக் கோட்பாட்டை முதலில் முன்வைத்தவர் கார்ல்மாக்ஸ் ஆவார். அவரின் நூலின் பெயர் டாஸ்கெபிட்டல் ஆகும். பொதுவுடமைத் தத்துவத்தில் ஈடுபாடு கொண்டிருந்த லெனின், ரஷ்யாவில் சர்வதிகார ஆட்சி நடத்திக் கொண்டிருந்த 2ம் நிக்கலஸ் சார் மன்னனின் ஆட்சியை நீக்கி, பொதுவுடமை ஆட்சியை ஏற்படுத்தினார். பொதுவுடமைக் கொள்கைகளின் சிறப்புக்களை தொழிலாளர்களுக்கு ஊட்டினார். இதனால் எழுச்சியடைந்த தொழிலாளர்கள் 1917இல் பத்து இலட்சம் பேர் அரசுக்கு எதிராக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். உலகில் முதலாவது பொதுவுடமை நாடாக ரஷ்யா மாறியது. பொதுவுடமை ஆட்சியை ஏற்படுத்துவதில் லெனினுக்கு ஆதரவாக ட்ரொஸ்க்கி, மார்டொவ் ஆகியோர் செயல்பட்டனர்.

4. சர்வதிகார ஆட்சி

பிரான்சிய மன்னர்கள் சர்வதிகார ஆட்சி நடத்தினார்கள். 14ம் லூயி, 15ம் லூயி, 16ம் லூயி ஆகியோர் ஆட்சியாளர்களுக்கு எதிராக பேசியவர்களைக் கைது செய்து பஸ்ரில் சிறைச்சாலையில் அடைத்தனர். மக்களுக்கு அச்சிறைச்சாலையில் கொடூரமான சித்திரவதைகள் நடைபெற்றன. 14ம் லூயி 'நானே அரசு' என்று கூறினார். சகல அதிகாரங்களும் என்னிடமே உள்ளன என்பதே இதன் பொருளாகும்.

அதிக வரிகள் விதிக்கப்பட்டமை

அரசர்கள் அதிக வருமானத்தைப் பெற்றுக் கொள்ள அதிகமான வரிகளை மக்கள் மீது விதித்தார்கள். மக்கள் தமது வருமானத்தில் 50% முதல் 60% வரை வரியாகக் கட்டவேண்டி இருந்தது. 'வேலி' என்ற வரியை நகரவாசிகளிடம் வசூலிக்காமல் கிராமவாசிகளிடமே வசூலித்தார்கள். 'கெப்பிடேசன்' என்ற புதிய வரியை மன்னன் அறிமுகப்படுத்தினான். மக்கள் தண்ணீருக்கும் வரிசெலுத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிஞர்கள் தோன்றியமை

ரூசோ (1712-1778), வோல்ரேயர் (1694-1778), மொண்டஸ்கியூ (1689-1755) ஆகிய அறிஞர்களின் கருத்துக்களால் மக்கள் எழுச்சியடைந்தார்கள். ''பிரான்சில் மனிதன் சுதந்திரமாகப் பிறக்கிறான். ஆனால் பிறந்தவுடன் அடிமைச் சங்கிலியால் பிணைக்கப்பட்டுள்ளான்'' என்று ரூசோ கூறினார். ''பிரான்சில் 3 வகை அதிகாரங்களும் மன்னனிடம் இருப்பதனாலேயே சர்வதிகாரம் நிலவுகிறது'' என்று மொண்டஸ்கியூ தனது 'சட்டத்தின் சாரம்' என்ற நூலில் கூறுகின்றார்.

டிசம்பர் மாதம் பரீட்சை எழுத இருக்கும் 11ம் தர மாணவர்களுக்கான ஆலோசனைகள்

1. வினாப்பத்திரத்தின் அமைப்பை நன்கு அறிந்து கொள்ள வேண்டும். உதாரணமாக வரலாறு பகுதி 2இல் மொத்தம் ஆறு வினாக்களுக்கு விடை எழுத வேண்டும். அவற்றுள் முதலாம் வினா கட்டாயமாகும். மேலும் 2ம் பகுதியிலிருந்து 3 வினாக்களையும் 3ம் பகுதியிலிருந்து 2 வினாக்களையும் தெரிவு செய்தல் வேண்டும்.
2. வழங்கப்பட்ட புள்ளியின் அடிப்படையில் ஒவ்வொரு வினாவுக்குமான நேரத்தை ஒதுக்க வேண்டும். உதாரணமாக ஒரு பெரிய வினாவுக்கு 30 நிமிடங்களை ஒதுக்கலாம். 30 நிமிடங்களில் 1ம் உப பிரிவுக்கு 2 நிமிடங்களையும் 2ம் உப பிரிவுக்கு 3 நிமிடங்களையும் 3ம் உப பிரிவுக்கு 10 நிமிடங்களையும் 4ம் உப பிரிவுக்கு 15 நிமிடங்களையும் ஒதுக்கலாம்.
3. பெரிய வினாவில் உள்ள 2ஐ விளக்குக என்றும் வினாவுக்கு 2 பந்திகளையும் 3ஐ விளக்குக என்னும் வினாவுக்கு 3 பந்திகளையும் எழுத வேண்டும். ஒவ்வொரு பந்தியும் சுமார் 10 வரிகளைக் கொண்டதாகவும் பிழையற்றதாகவும் போதுமான தகவல்களைக் கொண்டதாகவும் எழுதவேண்டும்.
4. பரீட்சை நடைபெறும் தினங்களில் பரீட்சை ஆரம்பமாவதற்கு 10 நிமிடங்களுக்கு முன்பே இருக்கையில் அமர்தல் வேண்டும்.
5. வினாக்கள் அனைத்தையும் நன்கு வாசித்து எழுதுவதற்குரிய வினாக்களைத் தெரிவு செய்யவேண்டும்.
6. ஒரு விடையை எழுத முன்பு திட்டமிட்டு விடையில் இடம்பெறும் விடயங்களை ஒழுங்குபடுத்தி எழுத வேண்டும்.
7. விடை எழுத முன்போ, எழுதும் போதோ, எழுதிய பின்போ எந்த வகையிலும் பதட்டப்படக் கூடாது.
8. படிக்கும் போது தொடர்ந்து வாசித்தால் எதுவும் மனதில் நிற்காது. வாசிப்பதைவிட படித்தவற்றை ஞாபகப்படுத்துவது அதிக பயனைத்தரும். படிக்கும் நேரத்தில் அதிக நேரத்தை படித்த தலைப்புக்களை நினைவுபடுத்துவதன் மூலம் அதிகமான விடயங்களை மனதில் பதித்துக் கொள்ள முடியும்.

ஜெலி மீன்கள்

(07ஆம் பக்கத் தொடர்...)

கொட்டும் கொடுக்குகள்

ஜெல்லி மீன்களின் அடிப்பகுதியில் காணப்படும் வால்களில் நெமடோசிஸ்ட்ஸ் (Nematocysts) எனப்படும் கொடுக்குகள் காணப்படுகின்றன. இதில் ஒரு வகை நச்சுப் பொருள் காணப்படுகின்றது. அவற்றில் ஏதேனும் பட்டால் உடனே தம்மிடம் இருக்கும் நஞ்சைப் பாய்ச்சுகின்றன. பெரும்பாலான நேரத்தில் மனிதர்களுக்கு இத்தாக்குதல் பல பாதிப்புகளை ஏற்படுத்துகின்றது. சிலபோது அது வலியை ஏற்படுத்துகின்றது. அதிலும் Cea whip வகையான ஜெல்லி மீன்களின் தாக்குதல் மனிதர்களுக்கு மூச்சடைப்பை ஏற்படுத்துவதுடன், இதயத்தையும் செயலிழக்கச் செய்து, மரணத்தை விளைவிக்கக்கூடியதாகவும் உள்ளது. இந்த நஞ்சு மனிதனை முப்பது நொடிகளுக்குள் கொல்லக்கூடியது.

ஜெல்லி மீன்களின் அழகையும் சாதுரியத்தையும் முடிந்தால் நீங்களும் நேரில் சென்று பாருங்கள். அருமையாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸீரா... (05ஆம் பக்கத் தொடர்...)

உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அபூஸுஃப்யானிடம் வந்தவுடன் உமரே! அல்லாஹ்வுக்காக நான் உன்னிடம் கேட்கிறேன். உண்மையில் நாங்கள் முஹம்மதைக் கொன்று விட்டோமா? இல்லையா? என்று கேட்டார். அதற்கு உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அல்லாஹ்வின் மீது சத்தியமாக! அவர்களை நீங்கள் கொல்லவில்லை, அவர்கள் உமது பேச்சை இப்போதும் கேட்டுக் கொண்டு தான் இருக்கிறார்கள் என்றார்கள். அதற்கு இப்னு கமி ஆவை விடவும் நல்லவராகவும் உண்மை சொல்பவ ராகவும் நான் உன்னை கருதுகிறேன் என்று அபூஸுஃப் யான் கூறினார். இந்த உரையாடலுக்குப் பிறகு உமர் (ரழியல்லாஹு அன்ஹு) திரும்பிவிட்டார்கள்.

அபூஸுஃப்யானும் அவரது படையும் மைதானத்தை விட்டு புறப்படும் போது அடுத்த ஆண்டு பத்ர் மைதானத் தில் ஷஅபான் மாதம் நாம் உங்களைச் சந்திப்போம் என்று முஸ்லிம்களுக்கு அறைகூவல் விடுத்தார். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களும் அந்த சவாலுக்கு சவால் விடும் முக மாக தனது தோழர்களில் ஒருவருக்கு ஆம்! அவ்வாறே ஆகட்டும் என்று சொல்லுங்கள் என்றார்கள்.

வீரத்திலும் விவேகத்திலும் மிகைத்த நபியவர்கள் இஸ்லாத்திற்கு எதிராக வரும் எந்த சவாலையும் ஏற் கக் கூடியவர்களாகவும் அவற்றை முறி யடிக்கக் கூடியவர்களாகவும் திகழ்ந் தார்கள்.

(இந்த இப்னு கமி என்பவனே நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல் லம்) அவர்களை தான் கொன்றுவிட் டதாகக் கூறியவன்.)

(29ஆம் பக்கத் தொடர்...)

தகவல்களை அறிந்து கொள்வீர்கள் என நம்பு கிறேன்.

மூன்றாவது மற்றும் குறிப்பில் கேட்கப்பட் டுள்ள வினாக்களுக்கான பதில்களை அடுத்த இதழ்களில் எதிர்பாருங்கள்.

குறிப்பில் காதல் விவகாரம் தொடர்பாகக் கேட்கப்பட்டிருக்கிறது. எல்லா உயிரினங்களிடத் திலும் காணப்படக் கூடிய, இயற்கையாகவே அல்லாஹ் எம்மில் வைத்துப் படைத்துள்ள ஒரு இயல்பே காதல். காதல் இல்லை என் றால் உயிரினங்கள் வாழ்வது அசாத்தியமானது என்பதில் நான் உடன்படுகின்றேன். ஆனால், அது நெறிப்படுத்தப்பட வேண்டும். ஒழுங்க மைக்கப்பட வேண்டும். அடுத்த இதழ்களில் இது பற்றி விரிவாகப் பேசுவோம், இன்ஷா அல்லாஹ்.

நாம் இன்று நினைத்துக் கொண்டிருக்கும் காதல் பற்றி ஒன்று மட்டும் இங்கு சொல்ல விரும் புகிறேன்.

காதல் என்பது காலில் வரும் சொறி சிரங்கு போன்றது. சொறியும் போது இதமாக இருக்கும். சொறிந்த பின் அது ரணமாக, வலியாக, வதை யாக மாறும்.

அடுத்த இதழில் சந்திப்போம் இன்ஷா அல்லாஹ்.

இளம் சாதனையாளர்... (37ஆம் பக்கத் தொடர்...)

2. எம்மைச் சூழ்ந்துள்ள வளங்களையும் வாய்ப் புக்களையும் முதலில் நாம் பூரணமாகப் பயன் படுத்திய பின்புதான் அவற்றை வேறு இடத் தில் தேட வேண்டும்.
3. பலரது ஆலோசனைகளை நாம் பெற்றாலும் ஒரு விடயத்தில் இறுதி முடிவெடுப்பது நாமே என்பது முக்கிய விடயமாகும்.
4. சுய முயற்சியும் தொடர்ந்தேர்ச்சியான பயிற் சியும் ஒரு சாதனையாளருக்கு மிகப் பெரிய சக்தியாகும்.
5. எதிர்ப்புகளைக் கண்டு ஏங்கி நிற்காது எதிர் நீச்சல் அடிக்கும் போதுதான் வெற்றியை அடைய முடியும்.

பொதுநலவாய மாநாடு... (13ஆம் பக்கத் தொடர்...)

பொதுநலவாய அரசதலைவர்களின் 23 ஆவது மாநாடு இலங்கையில் நடைபெற்றமைக்கு ஞாப கர்த்தமாக ரூபா 5, ரூபா 25 பெறுமதியான இரு முத்திரைகளும் 30 ரூபா பெறுமதியான தபால் அட்டையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற் றும் பொதுநலவாய அமைப்பன் செயலாளர் கமலேஷ் சர்மா ஆகியோரினால் தபால் துறை அமைச்சர் ஜீவன் குமாரதுங்க தலைமையில் வெளியிட்டு வைக்கப்பட்டது. இம்முத்திரைக ளுக்கான ஓவியங்களை ஓவியர் குமுது தாரக வடிவமைத்திருந்தமை குறிப்படத்தக்கது.

பொதுநலவாய அரச தலைவர்களின் அடுத்த (24 ஆவது) மாநாடு தென் ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான ''மோல்டாவில்'' 2015 இல் நடாத்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாதிக்கப் பிறந்தவர்கள் நாம்

ஜே.எம். அஸீம் (நளீமி)
www.azeemzain.org

சாதாரண நிலையில் இருக்கும் மனிதன் சாதிப்பதில்லை. சாதிப்பதற்கு அசாதாரண நிலை தேவை. அந்த அசாதாரண நிலை மனித இயல்பில் உள்ளது. தனது கவி வரிகளால் இளைஞர் சமுதாயத்தை தட்டியெழுப்பியவர் அல்லாமா இக்பால் அவர்கள். இந்த உற்சாகப்படுத்தலினதும் ஊக்குவிப்பினதும் அறுவடையை இந்த சமூகம் நாளை உணரும் என்பதால் தன்னை நாளைய கவிஞன் என வர்ணித்துக் கொண்ட இவர், மனிதன் தன் சுயத்தை அறிதல் வேண்டும் எனக் கவி பாடினார். இந்த சுயம்தான் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருக்கிறது. இந்த சுயம்தான் அவனை இயக்க வேண்டும். ஆனால், துரதிஷ்ட வசமாக அது இயக்குவதில்லை. சூழ்நிலைகளால் அது மழுங்கடிக்கப்படுகிறது. மழுங்கடிக்கப்படும் சுயம் சில கட்டங்களில் வெளிப்படுகிறது. நிர்ப்பந்தங்களால் மழுங்கடிக்கப்படும் சுயம் வெளிப்படுகிறது.

போராட்டத்தில் வீரம் வெளிப்படுவதும் போட்டியில் தீரம் வெளிப்படுவதும் இந்த சுயத்தில் இருந்துதான்.

சரி, அனைவருக்குள்ளும் இந்த சுயம் எப்போதும் இருக்கும் என்பதை நீங்கள் இப்போது புரிந்திருப்பீர்கள். அந்த சுயத்தை வெளிப்படுத்துவது எப்படி?

அந்த சுயம்தான் உங்களுக்குள் உள்ள திறமைகள், ஆற்றல்கள் என்பவற்றை வெளிக்கொணரும். உங்கள் திறமையை உலகறியச் செய்யும்.

இன்னொரு பக்கம்

இயல்பாக உள்ள சுயம் மழுங்கடிக்கப்படுவதால் அதனை வெளிப்படுத்துவதை நாம் மனிதனின் இன்னொரு பக்கம் என அடையாளப்படுத்துகிறோம். மனிதனின் இன்னொரு பக்கம் பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளிப்படுகிறது.

சிறு குற்றத்திற்காக சிறைத்தண்டனை அனுபவித்த ஓ ஹென்றி சிறைவாசம் அனுபவிக்கும் போது தான் தனது சுயத்தை, தனது இன்னொரு முகத்தைக் கண்டுகொண்டார். அப்போது தான் தனது மூளைக்குள் மழுங்கடிக்கப்பட்டிருந்த மகத்தான மேதையைக் கண்டுகொண்டார். கற்பனை வளம் எனும் மாமேதை அவரை உலகிற்கு தலைசிறந்த எழுத்தாளராகப் பரிணமிக்கச் செய்தது.

இசையால் உலகைக் கட்டிப்போட்ட பித்தோவனுக்கு காது கேட்காது. காதுக் குறைபாடு ஏற்பட்ட பின்னர்தான் தனக்குள் மழுங்கடிக்கப்பட்டிருந்த இசைமேதையைக் கண்டுபிடித்தார் இவர். இதுதான் சுயம், இதுதான் இன்னொரு முகம்.

ஹெலன் கில்லர், பிறந்து சிறிது காலத்தில் கண் தெரியாமல், காது கேட்காமல், வாய் பேச முடியாமல் போனவர்தான் ஹெலன். ஆனால், உலகம் உள்ளளவும் தன் பெயரை வரலாற்றுப் பக்கங்களில் பதித்து விட்டார்.

காரணம் அவர்கள் அவர்களது சுயத்தை அல்லது இன்னொரு முகத்தைக் கண்டறிந்ததுதான். எனவே, உங்களது சுயத்தை, உங்களது இன்னொரு முகத்தை நீங்கள் கண்டறியும் வரை நீங்கள் சாதாரண மனிதரே!

சுயத்தைக் கண்டறிந்த பின் போராட்டம்

வெற்றியின் இரகசியத்தை அறிந்து கொள்ள விரும்பிய இளைஞன் ஒருவன் சோக்ரடீஸை சந்தித்து தனக்கு வெற்றியின் இரகசியத்தை அறிய வேண்டும் என்று கூறினான். அவன் கண்களை உற்றுநோக்கிய சோக்ரடீஸ், நாளை காலை ஆற்றங் கரையில் வந்து என்னை சந்தி என்று கூறினார்.

மறுநாள் காலை ஆற்றங்கரையிற்கு அவ்விளைஞன் வந்ததும் அவனுடன் பேசிக்கொண்டே ஆற்றினுள் இறங்கினார். கழுத்தளவு நீர்வந்ததும், திடீரென அவனைத் தண்ணீரினுள் அமுக்கிப் பிடித்தார். தட்டுத்தடுமாறிப் போன அவ்இளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞன் தலையை வெளியே எடுக்கவும் சுவாசிக்கவும் போராடினான். சில நொடிகளின் பின்னர் அவனை விடுவித்தார் சோக்ரடீஸ்.

அவ்இளைஞன் தன்னை ஆசுவாசப்படுத்தி சுதாரித்துக் கொள்ளும் வரை காத்திருந்து விட்டு அவனிடம் ''நீரில் அமிழ்ந்ததும் நீ எதற்காகப் போராடினாய்?'' எனக் கேட்டார்

''சுவாசிக்கக் காற்றைப் பெறவே போராடினேன்'' என்றான் அவன். அவனை சற்று நேரம் பார்த்து புன்னகைத்த சோக்ரடீஸ் சொன்னார், அதுதான் வெற்றியின் இரகசியம். எமது இலக்கு எமக்கு காற்றைப் போல உயிரைக் காக்க அவசியமாகின்ற போதுதான் எம்மால் வெல்ல முடியும்; சாதிக்க முடியும்.

போராட்டம்: வெற்றியின் ஆரம்பம்

போராட்டம் இயல்பானது வெற்றியின் ஆரம்பமும் அதுவே.

ஓர் உயிரியல் ஆசிரியர் தனது மாணவர்களுக்கு ஒரு கம்பளிப் புழு எப்படி ஒரு வண்ணத்துப் பூச்சியாக மாறுகிறது என்று சொல்லிக் கொண்டிருந்தார். அவர் தனது மாணவர்களிடம் ஒரு வண்ணத்துப்பூச்சி கூட்டினைக் காட்டி, ''அடுத்த ஒரு சில மணி நேரங்களில் வண்ணத்துப் பூச்சி தனது கூட்டிலிருந்து போராடி வெளிவரப் போகின்றது. ஆனால் யாரும் அதற்கு உதவக் கூடாது'' என்று கூறிவிட்டு வெளியே சென்றார்.

மாணவர்கள் காத்துக் கொண்டிருந்தனர். கூட்டிலிருந்து வண்ணத்துப்பூச்சி வெளிவரப் போராடியது. மாணவர்களில் ஒருவன் அதன்மேல் இரக்கப்பட்டான். தனது ஆசிரியரின் சொல்லை மீறி, அந்த வண்ணத்துப்பூச்சி தனது கூட்டிலிருந்து வெளிவர உதவுவதற்குத் தீர்மானித்தான். அந்த வண்ணத்துப்பூச்சி போராடத் தேவையின்றி எளிதாக வெளியே வரும் பொருட்டு அந்தக் கூட்டை உடைத்தான். ஆனால் சிறிது நேரத்திற்கு பிறகு அந்த வண்ணத்துப் பூச்சி இறந்து விட்டது.

ஆசிரியர் திரும்பி வந்ததும் அங்கு என்ன நடந்தது என்பதை அவரிடம் விவரமாகச் சொன்னார்கள். இதனைக் கேட்ட ஆசிரியர், ''அந்த வண்ணத்துப் பூச்சிக்கு அவன் ஏதோ உதவுவதாக நினைத்து உண்மையில் கொன்று விட்டான். கூட்டிலிருந்து வெளிவரப் போராடும் போராட்டம் உண்மையில் அதனுடைய சிறகுகளை வளர்க்கவும் பலப்படுத்தவும் உதவும் என்பதுதான் இயற்கையின் விதி'' என்று அந்த மாணவனிடம் விளக்கினார்.

அந்த மாணவன் அந்த வண்ணத்துப்பூச்சியைப் போராட்டத்தில் இருந்து காப்பாற்றிவிட்டதால், அது இறந்து விட்டது.

('உங்களால் வெல்ல முடியும்' என்ற நூலிலிருந்து.)

சாதனையாளர்களின் வாழ்க்கையின் மறு பக்கங்கள்

இசையில் சாதனை புரிந்த பித்தோவனுக்கு காது கேட்காது. இலியட், ஒடிஸி போன்ற காவியங்களைப் படைத்த ஹோமருக்குக் கண் தெரியாது. தனது நாற்பத்து நான்காவது வயதில் கண் பார்வை இழந்த மில்டன், அதன் பிறகு எழுதிய உலகப் புகழ் பெற்ற காவியங்கள்தான் இழந்த சொர்க்கம், மீண்ட சொர்க்கம், ஸாம்ஸன் அகனைஸ்ட் போன்றவை ஆகும்.

ஒன்றரை வயதில் பார்வையை இழந்து, காதும் கேளாமல், பேசவும் முடியாமல்போன ஹெலன் கெல்லர் இவ்வளவு ஊனங்களையும் ஜெயித்து, தன்னை ஒரு மேதையாக்கிக் கொண்டு, உலகில் பல பாகங்களில் வாழும் ஊனமுற்ற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தினார்.

ஏழ்மையிலும் தனிமையிலும் இருந்த கணித மேதை ராமானுஜன் அதைப் பெரிதுபடுத்தாமல் வாழ்வில் முன்னேறினார். எழுதுவதற்குக் காகிதம் வாங்கக்கூடப் பணம் இல்லாமல், அவர் வேலை பார்த்த இடத்திற்கு வந்த பொட்டலங்கள் சுற்றியிருந்த தாள்களில் கணித சமன்பாடுகளை போட்டுச் சாதனைகள் செய்தவர். குடும்பத்தை விட்டுப் பிரிந்ததால் ஏற்பட்ட ஏக்கம் அவரை வாட்டியபோதும், அவற்றை எல்லாம் சமாளித்த ராமானுஜத்தின் அந்த மன உறுதிதான் உலகமே வியக்கத்தக்க பலகணித உண்மைகளைஉலகிற்கு வழங்கியது.

எனவே, உங்களுக்குள் இருக்கும் சுயத்தை வெளிக் கொண்டு வாருங்கள். பிறக்கும் ஒவ்வொரு உயிரும் சாதிக்கத் துடிக்கும் இயல்பிலேயே பிறக்கிறது. அந்தத் துடிப்பு அனைவரையும் சாதிக்க வைக்கும் வாழ்வில் நிங்கள் சாதிக்க வாழ்த்துக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் அதி சக்தி வாய்ந்த மனிதர்

- 2013ம் ஆண்டிற்கான உலகின் அதி சக்தி வாய்ந்த மனிதராக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
- இத்தெரிவு அமெரிக்காவின் போபர்ஸ் சஞ்சிகையினால் தெரிவு செய்யப்பட்டுள்ளது.
- கடந்த மூன்று வருடங்களாக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவே முதலிடத்தைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

2012 - 2013 பல்கலைக்கழக கல்வி ஆண்டு

- 2012 - 2013 பல்கலைக்கழக கல்வி ஆண்டு 2012 க.பொ.த (உ/த) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டனர்.
- 2012 இல் க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு தோற்றியோர் - 229, 737
- பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றோர் - 55, 241
- வெட்டுப்புள்ளிகளின் பிரகாரம் பல்கலைக்கழக அனுமதி பெற்றோர் - 22, 943
- 15 தேசிய பல்கலைக்கழகங்களுக்கு 70 கற்கை நெறிகளுக்காக 25 மாவட்டங்களுக்கான வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்பட்டிருந்தன.

உலக இணையத்தள தினம்

- உலக இணையத்தள தினமானது வருடாந்தம் ஒக்டோபர் 29இல் அனுஷ்டிக்கப்படுகின்றது.
- JCR Licklider (லிக்லெடர்) இணையத்தின் தந்தையாக அறியப்பட்ட போதிலும், ரிம் பேணர்ஸ் லியினால் HTML மூலம் இணையத்தளமானது உருவாக்கப்பட்டது.
- ஒரு நாட்டின் மக்கள் தொகையின் அடிப்படையில் அதிக எண்ணிக்கையில் இணையத்தை பயன்படுத்துவோர் உள்ள நாடாக இங்கிலாந்து (82.5%) விளங்குகின்றது.



திரு. பீ. உமா சங்கர்,
B.Com (Jaf), M.com (Kelaniya) (R) Spl.Trd.com, NDBF, Sri Lanka Technical College - Colombo

உலகின் மிகப்பெரிய விமான நிலையம்

- 2013 ஒக்டோபரில் உலகின் மிகப்பெரிய விமான நிலையம் டுபாயில் திறக்கப்பட்டுது.
- இவ்விமான நிலையத்தின் பெயர் அல் மக்தூம் (Al-Maktoum) என்பதாகும்.

இலங்கையின் 2வது சர்வதேச மாநாட்டு மண்டபம்

- 2013 நவம்பரில் இலங்கையின் 2வது சர்வதேச மாநாட்டு மண்டபம் அம்பாந்தோட்டை சிறிபோபுரவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- இலங்கையின் 1வது சர்வதேச மாநாட்டு மண்டபம் கொழும்பில் உள்ள பண்டார நாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபமாகும். (BMICH)

- மிகக் குறைந்த கட்டணத்தில் அதிக தரவு வேகத்தைத் தரும் நாடாக ஜப்பான் விளங்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுநலவாய மாநாடு 2013



- 2013 நவம்பரில் இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டில் பிரதம விருந்தினராக பிரித்தானிய இளவரசர் சாள்ஸும், செயலாளர் நாயகமாக கமலேஷ் சர்மாவும், அடுத்த இரு வருடங்களுக்கான தலைவராக மஹிந்த ராஜபக்ஷவும் கலந்து கொண்டனர்.
- இம் மாநாட்டில் கனடா, மாலைதீவு, இந்தியா, நியூஸிலாந்து மொறீஷியஸ் என்பன பங்கு பற்றவில்லை.
- அடுத்த மாநாடு 2015இல் நடைபெறவுள்ளது.

நிர்வாகக் கட்டடத் தொகுதி



- 2013 நவம்பரில் அம்பாந்தோட்டை மாகம் றுகுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுக வளாகதில் புதிய நிர்வாகக் கட்டடத் தொகுதி திறந்து வைக்கப்பட்டது.
- இந்நிருவாகக் கட்டடத் தொகுதி 'சயுரு பாய' என அழைக்கப்படுகின்றது.

கொழும்பு கட்டுநாயக்கா அதிவேக கடுகதி பாதை (CKE)



- இலங்கையின் இரண்டாவது அதிவேக கடுகதி பாதையான இப்பாதை 2013 ஒக்டோபரில் திறந்து வைக்கப்பட்டது.
- இப்பாதையின் நீளம் 25.8 கிலோமீற்றர்களாவதுடன், இப்பாதையினூடாக 20 நிமிடங்களில் பயணிக்க முடியும்.
- இச்செயற்திட்டத்திற்கான உத்தேசச் செலவு 292 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாவதுடன், 248.2 மில்லியன் ஐ.அமெரிக்க டொலர் சீன நாட்டின் உதவியுடனும், 43.8 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் இலங்கை அரசினதும் பங்களிப்பு செய்யப்பட்டது.

பொதுநலவாய மாநாட்டு ஞாபகார்த்த நாணயத்தாள், முத்திரை வெளியீடு

- பொதுநலவாய மாநாட்டு ஞாபகார்த்த நாணயத்தாளாக தற்போது நடைமுறையில் உள்ள ரூபா 500 நாணயத்தாளே CHOGM 2013 என்ற இலச்சினையுடன் ஏற்கனவே இருந்த வண்ணத்துப் பூச்சியை மட்டும் நீக்கி அச்சிடப்பட்டுள்ளது.
- இந் நாணயத்தாளில் உள்ள திகதி 2013.11.15 ஆகும்.
- பொதுநலவாய மாநாட்டு ஞாபகார்த்த முத்திரைகளாக ரூபா 5, ரூபா 25 என்பனவும், ரூபா 30 தபால் அட்டையும் தபால் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே/மா/ பதுரியா மத்திய கல்லூரி - மாவனல்லை



எழில் கொஞ்சும் மலையகத்தின் நுழைவாயிலாம் மாவனல்லையில் கிரிங்கதெனிய கிராமத்தில் எமது கல்லூரி அமைந்துள்ளது. கேகாலை மாவட்டத்தில் மட்டுமன்றி அகில இலங்கை ரீதியிலும் எமது கல்லூரி புகழ் மனம் பரப்பி வருகிறது.

20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கை வாழ் முஸ்லிம்களிடையே ஏற்பட்ட கல்வித் தாகம் கிரிங்கதெனிய வாழ் முஸ்லிம்களிடத்திலும் செல்வாக்குச் செலுத்தியது. இதன் விளைவாக 1918 ஆம் ஆண்டில் கிரிங்கதெனிய மஸ்ஜிதுன் நூர் பள்ளிவாயல் காணியில் பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. அதன் முகாமையாளராக மர்ஹூம் அபூபக்கர் லெப்பை அவர்கள் பணியாற்றினார். பின்னர், நிதி நெருக்கடி காரணமாக 1930 இல் அப்பாடசாலை தற்காலிகமாக மூடப்பட்டது.

பின்னர், 1940 இல் அரசாங்க உதவி நன்கொடை பெறும் பாடசாலையாக மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. அதன் முகாமையாளராக மர்ஹூம் மஜீத் ஹாஜியார் அவர்கள் செயற்பட்டார். இதுவே இன்றைய பதுரியா மத்திய கல்லூரியின் ஆரம்பமாகும். அப்போது மாணவர் எண்ணிக்கை 150 ஆக காணப்பட்டது. 1943 இல் இப்பாடசாலையை அரசாங்கம் பொறுப்பேற்றதுடன், 1944 இல் இரண்டாம் தரப் பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டது. அப்போது மாணவர் எண்ணிக்கை 300 ஆக அதிகரித்திருந்தது.

இப்பாடசாலைக்கு நியமனம் பெற்ற முதலாவது பயிற்றப்பட்ட ஆசிரியை செல்வி செல்லாச்சி ஆவார். 1953 இல் முதலாவது பாடசாலைக் கட்டடம் அமைக்கப்பட்டது. 1954 ஆம் ஆண்டில் முதல் முறையாக க.பொ.த.(சா/த) பரீட்சைக்கு நான்கு மாணவர்கள் தோற்றி நால்வரும் முதல் தடவையிலேயே சித்தியும் அடைந்தனர்.

1970.10.01 இல் இப்பாடசாலை மகளிர் பாடசாலையாக மாற்றப் பட்டதுடன் ஆண் மாணவர்கள் மத்ரசதுல் ஜவ்ஹரியா கட்டடத்திற்கு மாற்றப்பட்டு, அது தனியான பாடசாலையாக அந்நூர் என்ற பெயரில் செயற்பட்டது. எமது பாடசாலையில் 1973 இல் க.பொ.த (உ/த) கலைப் பிரிவும், 1979 இல் விஞ்ஞானப் பிரிவும், 1983 இல் வர்த்தகப் பிரிவும் முறையே ஆரம்பிக்கப்பட்டன.

1989 ஆகஸ்ட் மாதம் மீண்டும் அந்நூர் ஆண்கள் பாடசாலை பதுரியாவுடன் இணைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து எமது பாடசாலை ஒரு மத்திய மகா வித்தியாலயமாகத் தரம் உயர்த்தப்பட்டது. அதனால் எமது கல்லூரியை நோக்கி நாட்டின் நாலா பக்கங்களிலிருந்தும் மாணவர்கள் அனுமதி கோர ஆரம்பிக்கவே இடநெருக்கடியும் அதிகரித்தது. இதனால் அரசாங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பெற்றார் மற்றும் நலன் விரும்பிகள் ஆகியோரின் முயற்சியால் பல கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பாடசாலையின் தற்போதைய அதிபராக ஜனாப் M.T.M. நிஸ்தார் அவர்கள் கடமையாற்றி வருகின்றார். தற்போது 2560 மாணவர்கள் கல்வி கற்று வருவதுடன், 107 ஆசிரியர்கள் கடமையாற்றி வருகின்றனர். கல்வி, இணைப்பாடவிதானம், ஒழுக்கம் மற்றும் சமூக உறவில் காட்டி வருகின்ற திறமைகளால் கவரப்படும் பெற்றோர் தமது பிள்ளைகளைச் சேர்ப்பதில் காட்டுகின்ற ஆர்வமானது மேலும் இட நெருக்கடிகளைத் தோற்றுவித்துள்ளது. எனவே, பதுரியா அபிவிருத்தி நிதியம் BDT என்ற நலன்புரி அமைப்பினால் இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் டிசம்பர் 20 ஆம் திகதி மூன்று மாடிக் கட்டடத்திற்கான நிர்மான வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சையில் சாதனை

கடந்த 2012 க.பொ.த. (உ/த) பரீட்சையில் எமது பாடசாலை சிறந்த பெறுபேறுகளைப் பெற்று சாதனை படைத்துள்ளது. வர்த்தகப் பிரிவில் 9 மாணவர்கள் 3 பாடங்களிலும் ஏ சித்தியை பெற்றுள்ளனர். மேலும், விஞ்ஞான பிரிவில் 5 மாணவர்களும் கலைப் பிரிவில் 5 மாணவர்களும் பல்கலைகழகத்திற்கு தெரிவாகியுள்ளனர்.

கல்விப் பொதுத் தராதர சாதாரணதர பரீட்சையில் சிறப்பு சித்திகள்

க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் 70% மாணவர்கள் கணிதம், தமிழ் உட்பட உயர்தரம் கற்பதற்கான தகுதியைப் பெறுகின்றனர். 2012இல் நடைபெற்ற க.பொ.த (சா/த) பரீட்சையில் ஒரு மாணவி 9A சித்தியையும் இரண்டு மாணவர்கள் 8A - 1B சித்தியும் பெற்று எமது பாடசாலைக்குப் பெறுமை சேர்த்துள்ளனர்.

கடந்த வருடம் தேசிய மட்டத்தில் பெறப்பட்ட அடைவுகள்

மீலாத் நபி விழா போட்டி

எம்.எப். பாகித்	தரம் - 5	பேச்சு - அரபு	3ம் இடம்
எஸ்.ஏ.எம். லுக்மான்	தரம் - 7	பேச்சு - சிங்களம்	2ம் இடம்
ஏ.ஆர்.எப். அப்சா	தரம் - 8	வாசிப்பு	1ம் இடம்
ஏ.பி. ஸஹீர் அஹ்மட்	தரம் - 8	கட்டுரை	3ம் இடம்
எம்.வை.எப். ஸம்ரா	தரம் - 10	பேச்சு - அரபு	3ம் இடம்
ஏ.எம்.எம். பாசித் அலி	தரம் - 11	அரபு எழுத்தணி	1ம் இடம்
எம்.ஏ.எப். சஸ்னா	தரம் - 11	பேச்சு - ஆங்கிலம்	1ம் இடம்
எம்.என்.எம். அப்ரத்	தரம் - 11	பேச்சு	1ம் இடம்
எம்.எப்.எப். பர்கா	தரம் - 12	பேச்சு - அரபு	3ம் இடம்
எம்.என். எப். மிஸ்னா	தரம் - 12	பேச்சு	2ம் இடம்
எம். எஸ்.எப். ரிஸ்மினா	தரம் - 13	பேச்சு - சிங்களம்	2ம் இடம்

தேசிய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான புதிய கண்டுபிடிப்பாளர்கள்

ஏ.எஸ்.எம். சியான்	தரம் - 08	2ம் இடம்
எம்.எம்.எம். முஸ்க்	தரம் - 08	3ம் இடம்
எம்.எம்.எப். நஸ்மிலா	தரம் - 11	3ம் இடம்

இளம் கணினி விஞ்ஞானி போட்டி

- ஆர்.எம். ராஸித் அஹமட் — தரம் - 12 — 3ம் இடம்

தமிழ் தின விழாப் போட்டி

- எம்.ஆர். நஸ்ரின் — தரம் - 13 — சிறுகதை — 3ம் இடம்

HEALTH COMPETITION QUIZ

- எம்.எம்.எப். முஸ்ரிபா — தரம் - 11 — 3ம் இடம்

WORLD AIDS DAY GROUP QUIZ

- எம்.என்.எம். அப்ரத் — தரம் - 11 — 3ம் இடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுநலவாய அமைப்பு - 2013 கட்டுரை போட்டி

இலங்கையில் நடத்தப்பட்ட 23 வது பொது நலவாய மாநாட்டை முன்னிட்டு அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட தரம் 12, 13 ஆங்கில மொழி மூலமான கட்டுரைப் போட்டியில் எமது பாடசாலை மாணவர்களான ஆர்.எம். அமானுல்லா முதலாம் இடத்தையும் எம்.இஸட்.இஸ்ட். மின்ஹா 2ம் இடத்தையும் பெற்று பாடசாலைக்கு கீர்த்தியைப் பெற்றுத்தந்துள்ளனர்.

சீன அபிவிருத்தி கட்டுரை போட்டி - 2013

சீனாவின் 64 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இலங்கை - சீன சமூக, கலாச்சார ஒன்றியத்தினால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் தரம் 12 விஞ்ஞானப் பிரிவில் கல்வி கற்கும் மாணவன் எம்.என்.எம். அப்ரத் முதலாம் இடத்தைப் பெற்று பாடசாலைக்கு பெருமையைப் பெற்றுத்தந்துள்ளார். மேலும் 2013 அகில இலங்கை மீலாத் தின சிங்கள பேச்சுப் போட்டியில் 2ஆம் இடத்தை இம்மாணவர் பெற்றுள்ளார்.

YOUNG COMPUTER SCIENTIST – 2013

தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட கணினி மென்பொருள் தயாரிப்பு போட்டியில் தரம் 13 விஞ்ஞானப் பிரிவில் கல்விகற்கும் மாணவன் ஆர்.எம். ராஷித் அஹமட் முதலாம் இடத்தைப் பெற்று இளம் கணினி விஞ்ஞானியாக கௌரவிக்கப்பட்டார். மேலும், ASIA PACIFIC ICT AWARDS – 2013 போட்டி நிகழ்வுக்காக HONGKOHG ற்கு அழைக்கப்பட்டுள்ளார்.

அகில இலங்கை மீலாத் விழா - 2013

பேச்சுப் போட்டி தரம் 12-13 (ஆங்கில மொழிமூலம்) ஸஸ்னா முதலாமிடம்.

குர்ஆன் மனனம் இரண்டாமிடம் எம்.எச்.எச்.எம். முதஸ்ஸிர் (கனிஷ்ட பிரிவு)

மாகாண மட்டத்தில் 17, 19 வயதின் கீழ் உதைப்பந்தாட்ட அணிகள் மூன்றாம் இடங்களைப் பெற்று தேசிய மட்டப் போட்டிகளுக்குத் தெரிவாகியது குறிப்பிடத்தக்கது.

எமது பாடசாலையில் தொடரும் முக்கிய நிகழ்வுகள் சில

சுழற்சி அடிப்படையில் இல்ல விளையாட்டுப் போட்டிகளும் கல்விச் சுற்றுலாக்களும் முறையாக திட்டமிட்டு நடத்தப்படுகின்றன. இவ்வருடம் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான மாபெரும் இல்ல விளையாட்டுப் போட்டி சிறப்பாக நடைபெற்று முடிந்தது. ''முகைவிடும் வர்ணங்கள்'' மாபெரும் ஓவியக் கண்காட்சி இவ்வருடம் ஜூன் மாதம் வெகு விமர்சையாக நடைபெற்றது.

எமது பாடசாலையின் வெற்றிப் படிகளுக்கு பின்புலமாக பல கழகங்கள் செயற்படுவது குறிப்பிடத்தக்கது

சித்திரக் கழகம், வணிகக் கழகம், சுகாதாரக் கழகம், தகவல் தொடர்பாடல் கழகம், விஞ்ஞானக் கழகம், Mother ஸ்ரீ ලංකා கழகம் என்பன செயற்படுகின்றன.

இவற்றுடன் பாடசாலை மேம்பாட்டுக் கழகம், பள்ளிப் பரிபாலன சபை, பெற்றோர் பழைய மாணவர் சங்கம் மற்றும் பல நலன்புரிச் சங்கங்கள் செயற்படுவது குறிப்பிடத்தக்கது.

PUBLIC LIBRARY JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த இதழின் தொடர்...

ஹனீபா ஏ. வஹாப் (இஸ்லாஹி)

- மார்க்க விவகாரங்களில் பங்கெடுப்பதற்கான நேரம் (குர்ஆன், ஹதீஸ் விளக்க வகுப்புக்களில் கலந்துகொள்ளல்)
- குடும்ப, சமூக விவகாரங்களில் பங்கெடுக்கும் நேரம்

போன்ற முக்கிய அம்சங்கள் இந்த வாராந்த நாட்காட்டியில் உள்ளடங்கும். எந்தவொரு வேலையாக இருந்தாலும் அதற்கு எவ்வளவு நேரம் ஒதுக்கலாம் என்பதைத் தீர்மானித்து குறிப்பிட்ட அந்த நேரத்தினுள் வேலைகளை முடிப்பதற்கு முயற்சி செய்யுங்கள். வாராந்த நேரசூசியைத் தயாரித்துக் கொண்டாலும் நாளாந்தம் என்ன செய்ய வேண்டும் என்பதற்கான To Do List ஒன்றைத் தயாரித்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு நாளும் தூங்கச் செல்லும் முன்னர் அந்த நாளில் செய்ய வேண்டும் என்று பட்டியற்படுத்திய வேலைகள் எந்தளவு நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதை மீள்பரிசோதனை செய்து பாருங்கள் (முஹாசபா). அடுத்த நாளைக்குரிய வேலைகளை முன்னுரிமை அடிப்படையில் பட்டியற்படுத்திக் கொள்ளுங்கள். வேலைகளைப் பிற்போடுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

இவை தவிர மாணவர்களும் நேர முகாமைத்துவமும் என்ற தலைப்பல் 2012 ஆம் ஆண்டு அகரத்தில் பிரசுரமான கட்டுரையை வாசித்து இன்னும் அதிகமான பிரயோசனங்களைப் பெற்றுக்கொள்ளலாம். பழைய அகரங்களைத் தேடிக் கண்டு பிடிப்பது கடினமாயின் தற்போது சந்தையில் காணப்படும் ஆளுமை மிக்க மாணவன் ஆரோக்கியமான கற்றலை நோக்கி என்ற நூலை வாங்கி பிரயோசனமடைந்து கொள்ளுங்கள். அதில் மேற்குறிப்பிட்ட பல அம்சங்கள் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளன. தவிர http://www.aharam.lk/ என்ற வலைத்தளத்தையும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இரண்டாவது அம்சத்தை நோக்கும் போது இவை தொடர்பாக கடந்த 3 இதழ்களிலும் குறிப்பாக இதற்கு முந்திய இதழிலும் அதிகமான விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன என்பதை இங்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். உண்மையில் ஒருவருடைய நேரசூசியை மற்றொருவரால் தயாரிக்க முடியாது. ஆனால், அதற்காக உதவி செய்யலாம். எனவே, உங்களுடைய நாளாந்த வாழ்க்கை ஒழுங்குமுறை, நேரத்தை நீங்கள் பயன்படுத்த நினைக்கும் விதம் போன்றவற்றை மற்றொருவருடன் பரிமாறிக் கொள்ளும் போது உங்களுடைய நேரசூசியைத் தயாரித்துக் கொள்ள எனக்கோ அல்லது மற்றொருவருக்கோ முடியும் என நம்புகிறேன். இருப்பினும் ஒக்டோபர் மாத இதழில் பிரசுரமான என்னுடைய ஆக்கம் உங்களுடைய கேள்விக்கு மிகப்பிரயோசனமாக அமையும் என எதிர்பார்ப்பதுடன் மேலதிகமாக சில விடயங்களை உங்கள் கவனத்திற்குத் தருகிறேன்.

1. வாராந்த நாட்காட்டி (Weekly calendar) ஒன்றைத் தயாரித்துக் கொள்ளுங்கள்.
   - பாடசாலைக்குச் செல்லும் நேரம்
   - சுயகற்றலுக்கான நேரம்
   - பிரத்தியேக வகுப்புக்கள் நடைபெறும் நேரம்
   - சாப்பாடு, தூக்கம், உடற்பயிற்சிக்கான நேரம்
   - ஓய்வு மற்றும் பொழுதுபோக்குக்கான நேரம்

கேள்வி : 02

தெரிவுப் பாடங்களுக்காக (Basket Subjects) சிங்களம், புவியியல், ICT, ஆங்கில இலக்கியம் போன்ற பாடங்களைத் தெரிவு செய்தால் அப்பாடங்களுக்காகத் தன்னை எவ்வாறு தயார் செய்வது? பாடப் புத்தகத்தை மட்டும் படித்தால் போதுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ICT பாடம் பற்றிய ஒரு விளக்கத்தையும் அதில் A சித்தியைப் பெற விரும்பும் மாணவி எவ்வாறு படிக்க வேண்டும், பரீட்சைக்குத் தயாராக வேண்டும் என்பதையும் குறிப்பிடுங்கள்.

பதில் :

கட்டாயப் பாடங்களாயினும் சரி, தெரிவுப் பாடங்களாயினும் சரி பரீட்சைக்காகத் தன்னைத் தயார்படுத்த வேண்டுமென்றால் நிச்சயமாக தொடர்ச்சியான மீட்டல், காலத்தை அதற்காகச் செலவு செய்தல் போன்ற அம்சங்கள் அத்தியவசியமானவையாகும். குறிப்பாகத்தெரிவுப் பாடங்கள் எனும் போது அதில் உயர் தரத்திலான சித்திகளைப்பெற மாணவர்களாகிய நீங்கள் முதலில் உங்களுடைய மனோ நிலையை, மனோ பாவத்தை மாற்றிக் கொள்வது அவசியம். தெரிவுப் பாடங்கள் தானே என்ற ஒரு வகையான அலட்சிய சிந்தனை எம்மில் தோன்றுமனால் நிச்சயம் அந்தப் பாடங்களில் A தரச் சித்தியைப் பெறுவதற்குத் தேவையான முயற்சிகளை மேற்கொள்ள முடியாது பேய்விடும். எனவே, தெரிவுப் பாடங்களுள் பொருத்தமான பாடங்களைத் தேர்வு செய்யும் போது பின்வரும் அம்சங்களைக் கருத்திற் கொள்ளவது சிறந்தது.

முதலில் கருத்திற்கொள்ள வேண்டிய அம்சம் குறித்த பாடத்தில் உங்களுக்குள்ள விருப்பமாகும். எல்லோரும் தெரிவு செய்கிறார்கள் என்பதற்காக விருப்பமில்லாத பாடங்களை நாமும் தெரிவு செய்தால் A சித்தியைப் பெறுவது சற்றுக் கடினமாக மாறிவிடும். சிலநேரம் தெரிவுப் பாடங்கள் எதுவுமே விருப்பமில்லை என்றிருப்பனும் அதில் குறைந்தளவு விருப்பமில்லாத பாடங்களையாவது தெரிவு செய்து முயற்சிக்கலாம்.

கவனத்தில் கொள்ளவேண்டிய அடுத்த அம்சம் தெரிவு செய்த குறித்த பாடங்கள்தனக்கும், சமூகத்திற்கும் எதிர்காலத்தில்பிரயோசனமாக அமையும் என்ற நம்பிக்கையை வரவழைக்க வேண்டும். பிரயோசனப்படாத ஒன்றாக இருக்குமானால் அப்பாடத்தில் உள்ள அவதானம் குறைந்துவிடும். உதாரணமாக சிங்களப் பாடம் என்பது தமிழ் பேசும் மாணவர்களுக்கு இன்றைய கால கட்டத்தில் அத்தியவசியமான ஒன்றாகக் காணப்படுகிறது. எதிர்காலத்தில் ஒர் அரசாங்கத் தொழிலைப் பெறுவதாயினும் சரி அடுத்த சமூகத்துடனான தொடர்பாடலுக்காக இருந்தாலும் சரி சிங்களம் அத்தியவசியமானது என்ற உணர்வும் நம்பிக்கையும் வருமானால் அம்மொழியைப் படிப்பதிலுள்ள ஆர்வம் அதிகரிப்பதோடு A சித்தியைப் பெறுவதும் இலகுவாக அமைந்துவிடும். இது போலவே ICT பாடமும் இன்றை காலத்தில் அதி முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகிறது.

மொழிப் பாடங்களைப் பொறுத்தவரை கூடுதலாக புதிய சொற்களைத் தெரிந்து கொள்வதற்கும் அவற்றை அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்துவதற்கும் முயற்சி செய்யுங்கள்.

இந்த இடத்தில் ICT பாடம் தொடர்பாக சில விடயங்களைச் சொல்ல வேண்டும். இது புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு பாடமாகவும் இன்றை நவ யுகத்தில் மிகவும் பிரயோசனமிக்க ஒன்றாகவும் காணப்படுகிறது. எல்லாப் பாடங்களைப் போலவும் சில வரைவிலக்கணங்கள், கோட்பாடுகள் காணப்படுவதுடன் அதிகமான செயன்முறைப் பயிற்சியையும் வேண்டி நிற்கிறது. எனவே, பாடப் புத்தகத்தை மாத்திரம் படிப்பதுடன் நிறுத்திக் கொள்ளாது, பயிற்சியிலும் நன்றாக ஈடுபாடுகாட்டவேண்டும். பாடசாலைக் கணினிகளை இதற்காக உபயோகப்படுத்துங்கள். பரீட்சையில் A சித்தி பெற வேண்டுமானால் கணினிப் பிரயோக அறிவும் முக்கியம் என்பதை விளங்கிக் கொள்ளுங்கள்.

படிப்பதாக இருந்தாலும் சரி, கணினியில் பயிற்சி செய்வதாக இருந்தாலும் சரி, தரப்பட்ட புத்தகத்தை நான்றாகப் பயன்படுத்தினால் மாத்திரம் போதும். அதற்கு வெளியில் சென்று கஷ்டப்பட வேண்டிய அவசியமில்லை.

குறிப்பாக, தெரிவுப் பாடங்களும் முக்கியமானவை என்ற மனோபாவத்துடன், வாழ்க்கைக்குப் பிரயோசனம் தரக்கூடிய, விருப்பமான பாடங்களைத் தெரிவு செய்து முயற்சியுடன் படித்தால் நிச்சயமாக அப்பாடங்களில் A தரச் சித்தியைப் பெறமுடியும் என நம்புகிறேன். தவிர, குறித்த பாட ஆசிரியருடன் அல்லது அப்பாடத்தில் தேர்ச்சி பெற்ற ஒரு ஆசிரியருடன் நெருக்கமான, ஒரு கலந்துரையாடல் ஒன்றை நேரடியாகவோ, தொடர்பு சாதனங்கள் வழியாகவோ மேற்கொண்டீர்களானால் இன்னும் அதிகமான உங்களுக்கு நம்பிக்கையூட்டக் கூடிய

(20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி (அ) இல் 4 வினாக்களுக்கும் பகுதி (ஆ) இல் 5 வினாக்களுக்குமாக 10 வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

ஒவ்வொரு வினாவுக்கும் 10 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

பகுதி அ

01. விற்பனை நிலையமொன்றில் ரூ. 25000 விலை குறிக்கப்பட்டு பொருள் ஒன்றினை வாங்கும் போது முதலில் ரூ. 7000ஐ செலுத்தியும் மிகுதியை ரூ. 3975, 3825, 3675 என்ற ஒழுங்கிலும் ஆறு மாதங்களுக்கு தவணைக் கட்டணங்களாக செலுத்தியும் பெற்றுக் கொள்ள முடியும்.

i. ஆரம்ப கொடுப்பனவின் பின்னர் எஞ்சிய தொகை யாது?

ii. இதே ஒழுங்கில் செலுத்தினால் 6வது மாதத்தில் எவ்வளவு தொகையைச் செலுத்துவார்?

iii. எஞ்சிய தொகைக்காக செலுத்தப்பட்டுள்ள மொத்த வட்டியைக் காண்க.

iv. எஞ்சிய தொகைக்கு எளிய வட்டிப்படி வட்டி கணிக்கப்பட்டிருப்பின் வருட வட்டி வீதத்தைக் கணிக்க.

v. வட்டி வீதத்தை மாற்றாமல் குறையும் மீதிக்கேற்ப (வாடகைக் கொள்வனவு) மொத்த கடன் தொகைக்கு 6 மாத சம தவணைகளுக்கு வட்டிகளில் கணிக்கப்படுமாயின் 1 மாத அலகிற்கான வட்டி யாது?

02. $-4 \leq x \leq 2$ என்ற வீச்சுப் பகுதியினுள் கீறப்பட்ட இருபடிச் சார்பினது வரைபு படத்தில் காட்டப் பட்டுள்ளது.



a) வரைபின் மூலம்

i. $x = 1$ ஆகும் போது y இன் பெறுமானம் யாது?

ii. வரைபின் உயர்வுப் பெறுமானத்தைக் காண்க.

iii. வரைபு நேராகவும் அதிகரிப்பதுமான X இன் பெறுமான வீச்சு யாது?

iv. இந்த இருபடிச் சார்பு $y = (1-x)(3+x)$ எனின் வளையி பூச்சியமாகும் x இன் பெறுமானங்களைக் காண்க.

v. சார்பு $y = (1-x)(3+x)+k$ இன் வரைபு $(0,0)$ இனூடாக செல்லு மெனின், k மாறிலி இன் பெறுமானத்தைக் காண்க.

vi. சார்பு $y = (1-x)(3+x)$ இன் வரைபும் $y = -2x$ இனால் தரப்படும் நேர்கோடும் இடைவெட்டும் புள்ளியின் x ஆள்கூறிலிருந்து $\sqrt{3}$ இன் பெறுமானத்தைக் காணலாம் எனக் காட்டுக.

03. a) விமலனிடம் செங்கோண முக்கோண வடிவிலான குறுக்குவெட்டு முகத்தைக் கொண்ட சமமான 16 அரியங்கள் காணப்பட்டன. அவற்றைப் பயன்படுத்தி செவ்வக குறுக்குவெட்டு முகத்தைக் கொண்ட சீரான அரியமொன்றை உரு வாக்கினான்.



வடிவம் i



வடிவம் ii

i. வடிவம் i இன் நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவைக் காண்க.

ii. வடிவம் i இன் தடிப்பு 3cm எனின் வடிவம் ii இன் உயரத்தைக் காண்க.

iii. வடிவம் ii இன் சிறப்புப் பெயரினைத் தந்து அதன் கனவளவினைக் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

b) சதுர வடிவ குறுக்குவெட்டு முகத்தைக் கொண்ட செவ்வரியம் ஒன்றின் எஞ்சிய முகங்கள் செவ்வக வடிவானவை. சதுர முகத்தின் சுற்றளவு 4a உம் செவ்வக முகத்தின் சுற்றளவு 8a உம் ஆகும்.

i. செவ்வக முகத்தின் நீளத்தைக் காண்க.

ii. இவ் அரியத்தின் கனவளவு $3a^3$ எனக் காட்டுக.

04. a) ஆசிரியரின் வயது மாணவனின் வயதின் 4 மடங்கிலும் 3 குறைவு. மூன்று வருடங்களின் பின் இருவரின் வயதுகளின் கூட்டுத்தொகை 63 எனின்

i. மாணவனின் வயது x எனின் ஆசிரியரின் வயதினை x இன் சார்பில் தருக.

ii. சமன்பாடு ஒன்றினை உருவாக்குவதன் மூலம் மாணவனின் வயதைக் காண்க.

b) ஒருவரிடம் காணப்பட்ட ரூ. 5 நாணயங்களினதும் ரூ. 2 நாணயங்களினதும் பெறுமதி ரூ 72 ஆகும். ரூ. 5 நாணயங்களின் எண்ணிக்கையின் இரு மடங்கு 2 ரூபா நாணயங்களின் எண்ணிக்கை ஆகும்.

i. ரூ. 5 நாணயங்கள் x எனவும் ரூ.2 நாணயங்கள் y எனவும் கொண்டு இரு சமன்பாடுகளை உருவாக்குக.

ii. x, y இன் பெறுமானங்களை காண்க.

05. இராணுவத்திற்கு ஆள்சேகரிக்கும் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றிய விண்ணப்பதாரிகளின் நிறைகள் பற்றிய தகவல் கிட்டிய முழு எண்ணினால் காட்டப்பட்டுள்ளது.

வீதங்களின் நிறை (kg)	ந.பெறு (x)	வீரர்கள் (f)	fx
41 - 45		7	
46 - 50		10	
51 - 55		15	
56 - 60		18	
61 - 65		13	
66 - 70		11	
71 - 75		6	
		$\Sigma f =$	$\Sigma fx=$

i. அதிகமான விண்ணப்பதாரிகள் காணப்பட்டது எந்த ஆயிடையில்

ii. நேர்முகப்பரீட்சையில் கலந்து கொண்டவர்களின் இடைநிறையை கிட்டிய kg இல் தருக.

iii. 55kg இலும் அதிகமான நிறையுடையவர்கள் மாத்திரமே இராணுவத்திற்கு தகுதியுடையவர்கள் எனின் எத்தனை சதவீதமானோர் தெரிவு செய்யப்படுவர்?

iv. நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்பவர்களுக்கு பயணச் செலவிற்காக ஒதுக்கப்பட்ட பணம் யாது?

v. கலந்து கொண்டவர்களின் நிறைகளின் கூட்டுத்தொகையானது 4465 - 4785 என்ற வீச்சினுள் காணப்பட்டது என இராணுவ அதிகாரி கூறினார் எனின் இதனை நீர் ஏற்றுக் கொள்கின்றீரா? காரணத்துடன் விளக்குக.

06. i. $A=\begin{bmatrix}0, & 4, & x\\ 5, & -1, & 3\end{bmatrix}$ $B=\begin{bmatrix}-3, & 2, & 1\\ y, & -4, & -2\end{bmatrix}$

$A-B=\begin{bmatrix}3, & 2, & -3\\ 7, & 3, & 5\end{bmatrix}$ எனின் x, y இன் பெறுமானங்களைக் காண்க.

ii. சுருக்குக $\frac{5}{k(2k-1)}-\frac{3}{(2k-1)}$

iii. உருவில் செவ்வகம் ABCD இன் மூலைவிட்டம் $AC=17cm$ எனின் x ஆனது $5x^2-2x-287=0$ எனும் இருபடிச் சமன்பாட்டினை திருப்திப்படுத்துமெனக் காட்டுக.



பகுதி ஆ

07. a) வீதியிலுள்ள பழக்கடையொன்றில் அடுக்கி வைக்கப்பட்டுள்ள பழங்களில் அடியிலுள்ள 1வது நிரையில் 57 பழங்களும் அதற்கு மேலுள்ளதில் 51 பழங்களும் அதற்கு மேலுள்ளதில் 45 பழங்களுமாக காணப்பட்டன.

i. இதனை தொடராக எழுதி இரண்டு நிரைகளுக்கிடையிலுள்ள பழங்களின் எண்ணிக்கையின் வித்தியாசத்தைக் காண்க.

ii. அடியிலிருந்து 7வது நிரையில் எத்தனை பழங்கள் காணப்பட்டிருக்கும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii. மொத்தமாக 9 நிரைகளில் பழங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தால் மொத்தமாக எத்தனை பழங்கள் காணப்பட்டிருக்கும்?

iv. கொள்வனவு செய்யும் பழங்களில் 10% ஆனவை பழுதடைந்து விடுவதால் இவ்வாறான முறையில் அடுக்குவதற்கு 330 பழங்களையாவது கொள்வனவு செய்ய வேண்டுமென வியாபாரி கூறுகின்றார். எனின் இதற்கு நீர் உடன்படுகின்றீரா? விளக்குக.

b) $100m^2$ பரப்பளவு கொண்ட தடாகம் ஒன்றில் காணப்பட்ட தாவரங்கள் முதலாவது வாரத்தில் வளர்ந்த பரப்பளவில் இரண்டு மடங்கு அடுத்த வாரத்தில் வளர்ந்திருக்கும். இத்தடாகத்தில் 1வது வாரத்தில் $3m^2$ பரப்பளவுள்ள பிரதேசத்தில் தாவரங்கள் காணப்படின் முற்றாக நிரம்ப குறைந்தது எத்தனை வாரங்கள் தேவைப்படும்.

08. படத்தில் காட்டப்பட்டுள்ள தரவுகளைப் பயன்படுத்தி



i. AC யின் நீளத்தைக் கிட்டிய முழு எண்ணில் தருக.

ii. தரப்பட்டுள்ள வரைபடத்தினை உமது விடைத்தாளில் பிரதி செய்து $A\hat{C}D=90^0$, $DC=25m$ ஆகுமாறு புள்ளி D யை பக்கம் AC இன் மேற்பக்கமாக குறிக்குக.

iii. அதிலிருந்து $B\hat{A}D$ இன் பெறுமானத்தை காண்க.

b) BA எனும் பாதை ஓரத்திலுள்ள வீட்டிலிருந்து 600m தூரத்தில் 35^0 திசைக்கோளில் H என்ற வைத்தியசாலையும் 250m தூரத்தில் 125^0 திசைக்கோளில் M என்ற மஸ்ஜிதும் காணப்பட்டன.



i. வரிப்படத்தை பிரதி செய்து தரவுகளைக் குறிக்குக.

ii. வைத்தியசாலைக்கும் மஸ்ஜிதுக்கும் இடையிலுள்ள தூரத்தைக் காண்க.

09. ஹம்சியா குறித்த கலை நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வதற்கு வெவ்வேறு நிறங்களைக் கொண்ட தலைப்பட்டி ஒன்றையும் கைப்பட்டி ஒன்றையும் தெரிவு செய்ய வேண்டும்.

தலைப்பட்டி	4 வெள்ளை, 3 சிவப்பு
கைப்பட்டி	2 வெள்ளை, 1 சிவப்பு, 1 மஞ்சள்



i. தலைப்பட்டி ஒன்று, கைப்பட்டி ஒன்றினைத் தெரிவு செய்யும் போது பெறக்கூடிய சகல பேறுகளையும் பயன்படுத்தி மரவரிப்படத்தைப் பூர்த்தி செய்க.

ii. அவள் எழுமாற்றாக தெரிவு செய்த பொருட்களில்

a. வெள்ளை நிற தலைப்பட்டி, வெள்ளை நிற கைப்பட்டியாக இருப்பதற்கான

b. சிவப்பு நிற தலைப்பட்டியுடன் சிவப்பு அல்லது வெள்ளை அல்லாத கைப்பட்டி கிடைப்பதற்கான நிகழ்தகவு யாது?

b) ரிஷா, ரிதா என்ற பிள்ளைகளிடம் வெள்ளை, சிவப்பு நிறத்திலான தலைப்பட்டிகள் காணப்பட்டன. அது பற்றிய தகவல் வென்னுருவில் தரப்பட்டுள்ளது.



i. ரிஷாவிடமுள்ள தலைப்பட்டிகள் 20 எனின், அவளிடம் உள்ள வெள்ளை நிறப்பட்டிகள் எத்தனை?

ii. ரிதாவிடமுள்ள சிவப்பு நிறமல்லாத பட்டிகள் 15 எனின், அவரிடமுள்ள சிவப்பு நிற தலைப் பட்டிகள் எத்தனை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10, 11 தர மாணவர்களுக்கு

விஞ்ஞானம்



ஆசிரியர்: எம்.எம்.எஸ். பிரேம் நவாப்

தரம் 10 | மின் தொடர்பான தோற்றப்பாடுகளும் கோட்பாடுகளும்

- மின் ஒரு சக்தி வடிவமாகும். இது இலத்திரன்கள் காரணமாக ஏற்படும். மின் நிலைமின், மின்னோட்டம் என இரு வகைப்படும்.
- சடப்பொருட்களின் மேற்பரப்பில் இலத்திரன்களைப் பெறுதல், இழத்தல் காரணமாக உண்டாகும் அசையாத ஏற்றங்கள் நிலைமின்னேற்றங்கள் எனப்படும்.

01. சடப்பொருட்களை உரோஞ்சுதல், தூண்டல், தொடுகை போன்றவற்றின் மூலம் நிலைமின்னேற்றம் அடையச் செய்யலாம்.

a) மின்தொடரில் பட்டு, பொலித்தீனை விட மேலே உள்ளது. பொலித்தீன் கோலை பட்டுத் துணியால் உரோஞ்சும் போது நேர் ஏற்றம் பெறுவது எது ? மறை ஏற்றம் பெறுவது எது ?

b) பொன்னிலை மின்காட்டியை எவ்வழிகளில் மின்னேற்றம் அடையச் செய்யலாம் ?

c) இலைகள் விரிந்தவாறு காணப்பட்ட பொன்னிலை மின்காட்டி ஒன்றின் உலோகத் தட்டிற்கருகில் ஏற்றம் கொண்ட கோல் ஒன்றைக் கொண்டுவர இலைகள் மேலும் விரிந்ததாயின் அது எவ்ஏற்றத்தைக் கொண்டிருக்கும் ?

d) நிலைமின்னேற்றம் பயன்படும் சந்தர்ப்பங்கள் 4 தருக.

e) கொள்ளளவி ஒன்றின் கொள்ளளவம் எக் காரணிகளில் தங்கியிருக்கும் ?

விடைகள்

a) நேர்ஏற்றம் - பட்டு,
எதிரேற்றம் - பொலித்தீன்

b) தூண்டுதல், தொடுகை முறைகளில்

c) மறை ஏற்றத்தைக் கொண்டதாக இருக்கும்.

d) கொள்ளளவிகளின் தொழிற்பாடு, நிழல் பிரதியெடுத்தல் தொழிற்பாடு, நிலைமின் துப்பரவாக்கிகள், இடிதாங்கிகளின் தொழிற்பாடு

e) தகடுகளின் பரப்பு, தகடுகளுக்கிடையிலான இடைவெளி, மின்னுழையப் பதார்த்தத்தின் தன்மை.

மின்னோட்டம்

- கடத்திகளிலும் அயன் கரைசல்களிலும் மின்னேற்றங்களின் (–) அசைவினால் உருவாகும் சக்தி மின்னோட்டமாகும்.
- கடத்தியொன்றினூடாக மின்னோட்டம் (I) நடைபெறுவதற்கு அக்கடத்தியின் முடிவிடங்களுக்கிடையே அழுத்த வேறுபாடு (V) இருத்தல் அவசியமாகும். அழுத்த வித்தியாசத்திற்கு ஏற்ப மின்னோட்டமும் மாறுபடும் (விகித சமனாக) என்பதை 'ஜோர்ஜ்சைமன் ஓம்' என்பவர் கண்டறிந்தார்.
- கடத்திகளில் மின்னோட்டத்தின் அளவில் அதன் தடை (R) செல்வாக்குச் செலுத்தும்.
- எல்லாக் கடத்திகளுக்கும் வெப்பநிலை அதிகரிக்க அவற்றின் தடை அதிகரிக்கும். குறித்த வெப்பநிலையில் தடை பின்வரும் சமன்பாட்டினால் குறிப்பிடப்படும்.

$R = \frac{\rho \ell}{A}$ ρ = தடைத்திறன், ℓ = நீளம்,
A = குறுக்குவெட்டுப் பரப்பு

02. மின்சுற்றில் தடைகளின் செல்வாக்குப் பற்றி அறிவதற்காக அமைக்கப்பட்ட மின்சுற்று வரிப்படம் பின்வருமாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i. இச்சுற்றில் ஆளி K ஐ மூடும் போதா அல்லது திறந்திருக்கும் போதா மின்குமிழில் அதிக பிரகாசம் தோன்றும்? இதற்கான காரணத்தைக் குறிப்பிடுக.

ii. இங்கு ஆளி K ஐ மூடும் போது சுற்றில் ஏற்படும் மொத்த தடைப் பெறுமானம் யாது? இதன்போது சுற்றில் பாயும் மின்னோட்டத்தைக் காண்க.

iii. ஓமின் விதியை எழுதுக.

iv. தடையி ஒன்றின் தடைப் பெறுமானத்தைக் காட்டும் நிறக்கோடுகள் பின்வருமாறு காணப்பட்டன. இதன் தடைப் பெறுமானத்தைக் (வீச்சை) காண்க.



விடைகள்

i. ஆளியை மூடும்போது சுற்றின் தடை குறைவதனால் மின்னோட்டம் கூடும். இதனால் மின்குமிழின் பிரகாசம் கூடும்.

ii. மொத்தத் தடை

$$R = \frac{R_1R_2}{R_1 + R_2} = \frac{10\times10}{10+10} = \frac{100}{20} = 5\Omega$$

சுற்றில் மின்னோட்டம்

$$I = V/R = 6/5 = 1.2\,A$$

iii. வெப்பநிலையும் ஏனைய பௌதிகக் காரணிகளும் மாறாதவிடத்து கடத்தியொன்றினூடாகப் பாயும் மின்னோட்டமானது அக்கடத்தியின் இரு அந்தங்களுக்கிடையிலான அழுத்த வித்தியாசத்திற்கு நேர்விகித சமனாகும்.

iv. தடை வீச்சு $= 56\times10^3 \pm 10\%$

$= 56000 \pm 10\%$

$= (56000-5600)$ முதல்

$(56000+5600)$ வரை

$= 50400\Omega - 61600\Omega$

தரம் 11 | உயிரியலின் புதிய போக்குகள்

- மனிதனுக்கும் ஏனைய உயிரிகளுக்கும் உச்சப் பயன் கிடைக்கும் வகையில் உயிரங்கிகளையும் உயிர்த் தொழிற்பாடுகளையும் மேம்படுத்துதல் உயிரியல் தொழிநுட்பம் எனப்படும்.
- இது நுண்ணங்கிக்குரிய உயிரியல் தொழிநுட்பம், மூலக்கூற்று உயிரியல் தொழிநுட்பம் என 2 வகைப்படும்.

01. புராதன காலம் தொட்டே நுண்ணங்கிகளை மனிதன் பல்வேறு தேவைகளுக்காக பயன்படுத்தியுள்ளான்.

i. மதுவத்தின் காற்றின்றிய சுவாசத்தின் மூலம் குளுக்கோசு நொதிக்கச் செய்யப்படுவதற்கான இரசாயனச் சமன்பாட்டை எழுதுக.

ii. மேற்படி நொதிப்புச் செயற்பாடு பயன்படும் சந்தர்ப்பங்கள் எவை?

iii. நுண்ணங்கிகளின் உயிர்த் தொழிற்பாடுகளைப் பயன்படுத்துவதன் 4 நன்மைகளை எழுதுக.

iv. உயிர்ப் பீடை நாசினிகளாகப் பயன்படும் நுண்ணங்கிகளையும் அவற்றின் பயன்களையும் எழுதுக.

v. சூழல் தொகுதியை மேம்படுத்துவதில் நுண்ணங்கிகளின் முக்கியத்துவங்கள் மூன்றைக் குறிப்பிடுக.

விடைகள்

i. $C_6H_{12}O_6 \rightarrow 2C_2H_5OH + 2CO_2$

ii. பாண், அப்பம் தயாரிப்புகளில் மாக்கலவையைப் பொங்கச் செய்வதற்கு.

கள்ளு, அற்ககோல், வைன், பியர் போன்ற மதுபானங்களின் உற்பத்தி.

iii.
- இவற்றைப் பயன்படுத்துவது மலிவானது (செலவு குறைந்தது)
- இவற்றின் பெருக்கம் விரைவானது, விரைவாகப் பயனைப் பெறலாம்.
- சூழலை மாசுபடுத்தாது.
- இவற்றை பயன்படுத்துவது இலகுவானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iv. *Bacillus thuringiensis* பற்றீரியா - *Lepidoptera* குடம்பிகளை அழித்தல்

Alternaria பங்கசு சல்வீனியா நீர்க்களைக் கட்டுப்பாடு

v. சேதனக் கழிவுகளை கூட்டுரமாக்குகின்றன.

சேதன மாசுக்கள் சேர்ந்த நீர்ச்சூழலை சுத்திகரிக்கப் பயன்படுகின்றன. கடலில் சேரும் எண்ணெய்க் கழிவுகளைப் பிரிகையாக்கம் செய்யப் பயன்படுகின்றன.

மூலக்கூற்று உயிர்த் தொழிநுட்பம்

- அங்கியொன்றின் பரம்பரையலகை வேறொரு இன அங்கிக்கு மாற்றீடு செய்தல் அல்லது பரம்பரையலகின் தன்மையை மாற்றுதல் பிறப்புரிமைப் பொறியியல் அல்லது DNA மீளச் சேர்க்கைத் தொழிநுட்பம் எனப்படும்.
- இதற்கு *Escherichia Coli* எனும் பற்றீரியாவின் பிளாஸ்மிட் அதிகம் பயன்படுகிறது.
- இதன் மூலம் கிடைக்கும் பயன்கள்:
  1. இன்சுலின், வேறு ஓமோன்கள் உற்பத்தி செய்யப்படல்.
  2. நுண்ணுயிர் கொல்லி மருந்துகள் தயாரிக்கப்படல்.
  3. நோய்க்கு எதிர்ப்பியல்புடைய தாவரங்கள் உருவாக்கப்படல்.
  4. போஷணைச் சத்துகள், சுவை கொண்ட பழவர்க்கங்கள் உருவாக்கப்படல்.
  5. அதிகவிளைச்சல், கூடிய பருமன் கொண்ட விலங்குகள் உருவாக்கப்படல்.

மாதிரி வினாக்கள் - உயிரியல்

01. பல்வேறு கனிப்பொருட்கள் சூழலில் வட்டச் செயன்முறையாக இடப்பெயர்ச்சி அடைகின்றன. காபன் இவ்விதம் சக்கர வடிவில் சுழற்சியடைவதைப் பின்வரும் உரு குறிக்கின்றது.

A)



i. A, B, C, D, E என்பவற்றைப் பெயரிடுக.

ii. இங்கு நுண்ணங்கிகளின் தொழிற்பாடு நிகழ்வதைக் குறிக்கும் எழுத்து எது?

iii. P, Q எனும் எழுத்துக்கள் குறிக்கும் செயற்பாடுகளை எழுதுக.

iv. காபன் வட்டத்தைப் பாதிக்கச் செய்யும் செயற்பாடுகள் எவை?

B) நைதரசன் வட்டத்தின் ஒரு பகுதியை பின்வரும் உரு காட்டுகின்றது.



i. எழுத்துக்கள் P, Q, R, S, T என்பன குறிக்கும் செயன்முறைகளை எழுதுக.

ii. Q வில் பங்குகொள்ளும் நுண்ணங்கியின் பெயர் யாது?

iii. T எனும் செயற்பாட்டின் நன்மை யாது?

iv. நைதரசன் வட்டத்தைப் பாதிக்கும் மனித நடவடிக்கைகள் 4 ஐ எழுதுக.

விடைகள்

A) i. A - ஒளித்தொகுப்பு, B - சுவாசம்,
C - சுவாசம், D - தகனம்,
E - காற்றுவாழ் நுண்ணங்கி பிரிகை

ii. எழுத்து - E

iii. அங்கிகளின் இறப்பு, கழிவகற்றல்

iv. காடழிப்பு, எரிபொருட்களின் தகனம், தொழிற்சாலைக் கழிவுகள்

B) i. P - சுயாதீன நைதரசன் பதித்தல்
Q - ஒன்றிய வாழ் நைதரசன் பதித்தல்
R - நைத்திரேற்றாக்கம்
S - நைதரசன் இறக்கம்
T - மின்னல்

ii. றைசோபியம் எனும் பற்றீரியா

iii. வளிமண்டல நைதரசன் சேர்வையாக புவியை அடையும்

PUBLIC LIBRARY … NA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு நானே முதல் நண்பன்

தமிழில்: அலா அஹமட்

பரந்து விரிந்த ஓர் அழகிய காட்டில் பர்ரா என்ற ஒரு முயல் வசித்து வந்தது. அதற்கு பல நண்பர்கள் இருந்தனர். அது நண்பர்களை நினைத்து கர்வத்துடன் காணப்பட்டது. தனது நண்பர்களைப் பற்றி ஏனையோரிடம் பெருமை பாராட்டிப் பேசுவது இதன் வழக்கம். நண்பர்களுடனே அதிக நேரத்தினை வீணாகச் செலவிடும். தனது கருத்துக்களை விட தனது நண்பர்களது கருத்துக்களையே முற்படுத்தும்.

ஒரு நாள் பர்ரா தன் வீட்டின் அருகே காட்டு நாய்களது குரைக்கும் சப்தத்தை செவிமடுத்து கடுமையாகப் பயந்து போனது. தனது இருப்பிடம் பறிபோய்விடுமோ என சிந்திக்கலானது. பின்னர் தனது நண்பர்களிடம் அந்நாய்களின் தீங்குகளிலிருந்து பாதுகாப்பு பெறுவதென முடிவு செய்தது.

''எனது நண்பர்கள் என்னருகே இருக்கும்போது எனக்கென்ன பயம்'' என தனக்குத் தானே கூறிக்கொண்டது.

முதலில் நெருங்கிய நண்பனான சிங்கத்திடம் சென்றது.

''நண்பனே சில காட்டு நாய்கள் என்னை துரத்திக் கொண்டு வருகின்றன. எனது இருப்பிடம் பறிபோய் விடுமோ எனப் பயமாக உள்ளது. உன்னால் எனக்கு உதவி செய்ய முடியுமா?'' எனக் கேட்டது.

அதற்கு சிங்கம் ''எனக்கு முடியும். ஆனால் இப்போது நான் பிஸியாக உள்ளேன். நீ ஏன் யானையிடம் சென்று உதவி கோரக்கூடாது'' என்றது.

எனவே முயல் யானையிடம் சென்று 'நண்பனே நீ மிகவும் பலமானவன். தயவு செய்து எனக்கு இந்த காட்டு நாய்களிடம் இருந்து பாதுகாப்புத் தரமுடியுமா?' எனக் கேட்டது.

அதற்கு யானை 'என்னை மன்னித்துக்கொள் தற்போது எனக்கு கடும் பசியாகவும் தாகமாகவும் உள்ளது. இப்போது எனக்கு உணவுகள் தேவை. நீ குரங்கிடம் போய் உதவி கேள்' என்று கூறியது.

இவ்வாறாக குரங்கு, கரடி, மாடு, ஆடு என பல நண்பர்களிடம் போய் உதவி கோரியது. அவர்களும் இன்னொருவரைச் சுட்டிக்காட்டி நழுவிக் கொண்டனர். தனது நேரங்களை நண்பர்களுக்காக செலவளித்தமையையும் தனக்காக யாரும் உதவிசெய்ய முன்வராமையையும் நினைத்து பர்ரா மனம் உருகியது.

பின்னர் கடுமையாக சிந்திக்கலானது. ''ஏன் நான் பிறரிடம் சென்று கையேந்த வேண்டும். இறைவன் தந்த அறிவைக் கொண்டு இதற்கான யுக்தியை ஏன் கையாளக் கூடாது?'' என சிந்தித்து கடும் யோசனையில் ஆழ்ந்தது.

பின்னர் புலி போன்று மாற்று வேடம் பூண்டு ஏன் அந்த நாய்களை ஏமாற்றக் கூடாது என சிந்தித்தது. அந்த யோசனையை நடைமுறைப்படுத்தியது. எனவே, சில நாட்களில் அந்த நாய்களின் தொல்லை ஒழிந்து போனது. முயல் சுய கௌரவத்துடன் வாழ்ந்து வந்தது.

'பிறரிடம் சென்று கையேந்துவதை விட்டு எனக்கு நானே முதல் நண்பன்' என்ற தீர்மானத்திற்கு இறுதியாக வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்மொழிச் சாதனையாளர்
Timothy Doner

சோதனைகளைத் தாண்டியே சாதனையை புரிய முடியும் என்ற விதிக்கு இவரும் விதிவிலக்கன்று. எதிர்நோக்கிய சவால்களை சகித்து சாதிக்கும் மனதைரியம் அவரிடம் மேலோங்கிக் காணப்பட்டது. ''வேற்று மொழிகளை கற்பதற்காக அந்நாட்டு நபர்களுடன் பேசும் வாய்ப்பு அமையும்போது என்னை அவர்களது மொழியில் கேவலமாக பேசி புண்படுத்தினர். இன்று அவர்களுக்கு பதிலளிக்க முடியும்'' என தெரிவித்த டோனர் ''மொழியை Fun ஆக மாற்ற முயற்சி செய்யுங்கள்'' என்று கூறுகின்றார். இதுவே இவரது சாதனையின் தாரக மந்திரமாகக் காணப்பட்டது.

இரு மொழிகளைப் பேசுவதே பலருக்கு சவாலாக மாறியுள்ள இன்று 23 மொழிகளைப் பேசி ஓர் இளம் சாதனையாளர் மெய்சிலிர்க்க வைத்துக்கொண்டிருக்கிறார். அவர்தான் டிமோதி டோனர். தற்போது 17 வயதான இவர், அமெரிக்காவின் நிவ்யோர்க் நகரில் வசித்து வருகிறார். வித்தியாசமான, கடினமான, வேறுபட்ட 23 மொழிகளைப் பேசும் திறன் படைத்த இவர் இன்றைய இளம் தலைமுறையினருக்கு சிறந்த முன்மாதிரியாவார்.

மிகக் குறுகிய காலத்தில் மொழியொன்றைப் பேசும் ஆற்றலைக் கொண்ட இவரை நிபுணர்கள் 'ஹைபர்பாலிகிளாட்' எனும் வகையினுள் உள்ளடக்குவர். மொழித்திறமையை வளர்ப்பதில் இவரே இவருக்கு முதன்மை ஆசிரியராக இருந்ததுடன் தொடர்ந்தேர்ச்சியான சுயமுயற்சியால் இச்சாதனையை இலகுபடுத்தினார். தனது மொழியாற்றலை இவர் வளர்த்த விதம் ஆச்சரியமானதோ கடினமானதோ அல்ல. தனக்கெதிரே காணப்பட்ட வளங்களையும் வாய்ப்புக்களையும் பூரணமாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்தினார்.

நிவ்யோர்க் நகரில் வேலைபுரியும் வாகன சாரதிகளுடனும் விடுதிகளில் (Resturants) தங்குவதற்காக வருகின்ற வேற்று மொழியாளர்களுடன் உரையாடுவதன் மூலமும் வேற்று நாட்டவர்களுடனான மின்னஞ்சல், ஸ்கைப் போன்ற தொடர்பாடல் ஊடாகவும் தனது மொழியாற்றலை வளர்த்தார். தனது பாடசாலை, பல்கலைக்கழக விடுமுறை நாட்களில் ஒரு நாளில் 15 மணித்தியாலங்களுக்கும் அதிகமான நேரத்தினை மொழித்திறனை வளர்ப்பதில் பயன்படுத்தினார். இலக்கண நூற்களின் உதவியுடனும் தனது ஐபோனில் உள்ள Flash Card Applications ஊடாகவும் தனது இலக்கை இலகுபடுத்தினார்.

''மக்கள் என்னை ஓர் மொழியைத் தெரிவு செய்து அதில் Master செய்யுமாறு கூறினர். ஆனால் எனக்கு பல மொழிகளைப் படிப்பதே ஆர்வமாக இருந்தது'' எனக் கூறும் டோனர் தனது ஆற்றலை மிகச் சரியாக விளங்கியிருந்தமை இதிலிருந்து புலனாகிறது.

உலக மகா யுத்தம் பற்றிய படங்களைப் பார்த்து ஜேர்மன் மொழியை கற்ற இவர் நான்கு நாட்களில் அரபு மொழி அரிச்சுவடியை படித்தார். ஒரு வாரத்தினுள் அரபு மொழியை சரளமாக வாசிக்க முடிந்தது என நிவ்யோர்க் டைம்ஸ் பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

தற்போது பல நாடுகளின் பிரதான மொழியான மலே மொழியைக் கற்பதில் ஈடுபட்டுள்ள இவரது பல மொழிகளில் பேசிய வீடியோக்கள் இன்று youtube இல் காணப்படுகின்றன. அதில் 20 மொழிகளில் பேசிய ஒரு வீடியோ ஒரு மில்லியன் தடவைகள் பார்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

''நான் நினைக்கிறேன் மொழிகளைப் படிப்பதால் வினைத்திறனாக அதிக விடயங்களைக் கற்க முடிவதுடன் பல கலாசாரங்கள் பற்றியும் படித்துக் கொள்ளவும் முடியும்'' எனக் கூறுகிறார் டிமோதி டோனர்.

இவரிடமிருந்து கற்கும் பாடங்கள்

1. எந்த விடயத்தினையும் விருப்பத்துடன், மகிழ்ச்சியாக செய்யும்போது அவ்விடயத்தை இலகுவாகவும் விரைவாகவும் செய்ய முடியும்.

(20 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிம்மதி தொலைஞ்சாச்சி...

மேற்குலகு எழுந்தாச்சி
பண்பாடு அழிந்தாச்சி

இனிய திருமறை மறந்தாச்சி
இசைத்திட மறுத்தாச்சி

சினிமாக்கள் விழிச்சாச்சி
சிந்தனைகள் கருகிப் போயாச்சி

தாய் முகம் மறந்தாச்சி
சுமை என நினைச்சாச்சி

கடலும் வந்து சொத்தும் அழிந்தாச்சி
படிப்பனை பெற மறந்தாச்சி

மாயங்கள் தலை தூக்கியாச்சி
மறை பேச்சை மறந்தாச்சி

மேற்குலகு எழுந்தாச்சி
பண்பாடு அழிந்தாச்சி

எம்.எப்.எப். பஸ்மினா, தரம் 9
வெலம்பொட. மு.ம.வி.
வெலம்பொட



இறைமறை திருக்குர்ஆன்

அறியாமையில் முத்தெடுத்த அந்த
பூலோக மக்களுக்கு
அறியாமையைத் தகர்த்து
அறிவின் ஒளி வீசிட
இறைவனிடமிருந்து கிடைத்த
மாபெரும் அருட்கொடை நீ

நேரான வழிக்கு தீபமேற்றி
அறியாமையை தீயிட்டுக் கொழுத்தி
அநியாயத்தை அடியோடு தகர்த்து
பண்பில்லா உலகத்தை
பண்பின் உறைவிடமாக ஆக்கிட
இந்த பாரினிலே உன்னை
தவழச் செய்தான் அந்த இறைவன்

நல்லவற்றை எம்மில்
பரவச் செய்து
தீயவற்றை எம்மிலிருந்து
தடுத்து விட்ட நீ
மனிதனாய் வாழ்ந்த எம்மை
மனிதரிலும் புனிதனாய் ஆக்கிட
எமக்குக் கிடைத்த பொக்கிஷம்
நீயே தான் நண்பனே...!
என்றும் எம் தோழனாய் நீ
இருக்க வேண்டும்.

ஜுனைதா ஸஹ்பர்,
முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரி
கள் எளிய

நரம்பில்லா நாவுகள்

தினமும் மலர வேண்டும் பெண்ணே உன்-
மனதில் மாண்புமிகு ஈமானிய மலர்கள்
கணமும் ஒலிக்க வேண்டும் பெண்ணே உன்-
மொழியில் இறைவனின் திருநாமங்கள்

தவறிய வார்த்தைகள் உன் வாயினிலே
தங்கிய விசும்புகள் உன் பேச்சினிலே
புரியாத புதிர்கள் உன் வாழ்வினிலே
விடை தெரியாத கேள்விகளும் உன் நெஞ்சினிலே

மனம் மாற நினைப்பதில்லையோ நீ-
அதை மாற்ற நினைப்பதென்னவோ நீ-
வானவில்லின் பல நிறங்களை பார்ப்பாய்
உன் வாழ்விலும் பல பரிணாமங்களை ஏற்பாய்

பூமிக்கு அருட்கொடை பெய்யும் மழை
பெண்ணுக்கு அடக்கமே பெரிதொரு மலை
தவணை போடாது தவறுகளைக் களை
தந்ததே இஸ்லாம் பெண்ணுக்கொரு கலை

நுஸ்கியா ஜுனைஸர்
ஆயிஷா ஸித்தீக்கா கலாபீடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavahaham.org

ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்

நேரம் 45 நிமிடம்

வினாப்பத்திரம் I

ஆசிரியர்கள். எஸ்.ஐ.எல். முஸம்மில் எம்.எம். முபாரக்

முதல் படத்திற்கு மிகப் பொருத்தமான படத்தை தெரிந்து கோடிடுக.

1.



i ii iii

2.



i ii iii

3.

i ii iii

4.



i ii iii

5.



i ii iii

பின்வரும் பாடலை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.

வானம்பாடி மயிலின் கூத்தை
வாழ்த்திப் பாட்டுப் பாடுது
வண்ணக் கிளியும் வந்திருந்து
மயிலின் கூத்தைப் பார்க்குது

நஞ்சைக் கக்கும் நாகப் பாம்பு
நடிக்கும் மயிலைப் பார்க்குது
அஞ்சிப் புற்றில் ஒளிந்திடாமல்
அருகில் நின்று பார்க்குது

6. வானம்பாடியின் ஒலிமரபு
   i. பாடும் ii. கூவும்
   iii. பேசும்

7. கூத்து, வானம், அஞ்சி என்பனவற்றுக்கு கருத்து முறையே
   i. வாத்து, ஆகாயம், பயந்து
   ii. நடனம், பயந்து, வானம்
   iii. நடனம், விண், பயந்து

8. பாடலில் இடம் பெற்ற பறவைகள்
   i. கிளி, வானம்பாடி, மயில்
   ii. பாம்பு, மயில், வானம்பாடி
   iii. கிளி, குயில், மயில்

9. இரண்டாம் பாடலில் இடம்பெற்ற அஃறிணை வினைச்சொல்
   i. பாடுது ii. பார்க்குது
   iii. பாம்பு

10. வானம் என்பதன் எதிர்க்கருத்து
   i. பூமி ii. வான்
   iii. ஆகாசம்

"அ" பகுதிக்குப் பொருத்தமான விடைகளை "ஆ" பகுதியில் இருந்து தெரிந்து அதன் குறியீடுகளை புள்ளிக்கோட்டில் எழுதுக.

(அ)	(ஆ)
11. முல்லைக்கொடி	- A அன்னாசி
12. கிரேக்கம்	- B தேயிலை
13. போர் வீரனைப் போன்றது	- C எடிசன்
14. மின்குமிழ்	- D பாரி
15. லூல்கந்துர	- E ஒலிம்பிக்

தரப்பட்டுள்ள சொற்களுக்குப் பொருத்தமான உருவின் கீழ் கீறிடுக.

16. அழகு, மென்மை, நிறம்

17. பயணிகள், எரிபொருள், வேகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தமற்ற உருவைத் தெரிவு செய்து அதன் கீழ் கீறிடுக.

18.



19.



முதலில் தரப்பட்டுள்ள சொற்களுக் கிடையே காணப்படும் தொடர்புக்கு ஏற்ப மூன்றாவது தொடர்புடைய சொல்லின் கீழ் கோடிடுக.

20. பாம்பு - ஊர்வன - மீன்

i. பறப்பன ii. நடக்கும்
iii. நீந்துவன

21. ஊசி - நூல் - துப்பாக்கி

i. வீரன் ii. ரவை
iii. வெடிச்சத்தம்

22. மரம் - இலை - புத்தகம்

i. படம் ii. பக்கம்
iii. எழுத்து

23. இரண்டு நகரங்களுக்கிடையே காணப்படும் தூரத்தை அளப்பதற்குப் பயன்படும் அலகுக் குறியீடு.

i. m ii. cm
iii. km

24. ஐந்து ரூபா நாணமொன்றின் தடிப்பை அளப் பதற்கு பயன்படுத்தும் அலகுக் குறியீடு.

i. cm ii. mm
iii. m

25. குளத்தில் மீன்கள் இறந்து மிதந்து காணப் பட்டன. அதற்குரிய காரணம்.

i. மழைகாரணமாக நீர் அதிகரித்துக் காணப் பட்டமை

ii. நீரில் நஞ்சு கலந்ததால்.

iii. நீர் குளிராக காணப்பட்டதால்.

26. காகத்திற்கும் குயிலுக்குமிடையேயுள்ள வித்தியாசத்தை அறிந்து கொள்ளப் பொருத் தமானது

i. முட்டையின் நிறம்

ii. உருவம்

iii. குரல்

27. ஓணாண் முட்டையிடுவது

i. பொந்தில் ii. மணலில்

iii. சுவர் ஓட்டைகளில்

28. எமது நாட்டில் காணப்படும் பணத்தில் மிகப் பெறுமதி கூடிய தாள் காசு ஒன்று

i. ரூபா 2000 ii. ரூபா 5000

iii. ரூபா 1000

29. ரூபா 250இன் 1/4 பங்கு எவ்வளவு?

i. ரூபா 150.00 ii. ரூபா 125.00

iii. ரூபா 62.50

30. 1m நீளமான கம்பியை நான்கு சம அளவாக வெட்டினால் ஒரு கம்பித் துண்டின் நீளம்

i. 50 cm ii. 75 cm

iii. 25 cm iv. 10 cm

பின்வரும் A, B, C, D என்ற அடைப்புக்குள் சில பழங்களும் சில மரக்கறிகளும் கிழங்கு வகைகளும் காணப்படுகின்றன. இதற்கு ஏற்ப கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

A	B	C	D
மாம்பழம் கத்தரிக்காய் பப்பாசி	வற்றாளை அப்பிள் கோவா	வெண்டி கரட் தோடை	மரவள்ளி உருளைக்கிழங்கு பீட்றூட்

31. இந்த அடைப்புகளுக்கிடையே மூன்று கிழங்கு வகைகளும் இரண்டு பழவகைகளும் காணப்படும் தொகுதி யாது?

i. B,C ii. D,A

iii. A,B

32. இரண்டு மரக்கறி, ஒரு பழவகை, ஒரு கிழங்குவகை, ஒரு மரக்கறி ஆகியன காணப் படும் தொகுதி

i. B,C ii. A,B

iii. C,D

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. முக்கோணத்திற்கும் வட்டத்திற்கும் உரிய இலக்கங்கள் எவை?



i. 5, 2   ii. 9, 1
iii. 4, 7

34. குறிப்பிட்ட மாதம் ஒன்றின் முதலாம் திகதி சனிக்கிழமையாகும். அம்மாதத்தின் அடுத்த சனிக்கிழமை எத்தனையாம் திகதி?

i. 7ம் திகதி   ii. 8ம் திகதி
iii. 9ம் திகதி

உருவிற்கு பொருத்தமற்ற சொல்லின் கீழ் கீறிடுக.

35.

i. கயிறு
ii. எண்ணெய்
iii. இளநீர்
iv. பன்னீர்

36.

i. குளிர்
ii. ஈரலிப்பு
iii. வெப்பம்
iv. நீர்

கீழே தரப்பட்டுள்ள இடங்களை வசிப்பிடமாகக் கொண்ட விலங்குக் கூட்டத்தைப் பெயரிடுக.

37.

38.


39.


40.

5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை 2013

கு/ மஹவ/ வன்னிக்குடாவெவ முஸ்லிம் வித்தியாலயம், கல்கமுவ

M.T. சுமையா சஹ்ரின்
171

M.S.F. அப்ரா
165

M.A.M. அமீன்
157

M.A. அஜ்ஜாஸ் அஹமட்
165

க/ இக்ரஹ் முஸ்லிம் மகா வித்தியாலயம், உலப்பன

M.A.M. மர்ஹமா
165

M.A. நுஸ்கி
160

M.A.M. நஷ்லா
159

M.A. மரியம்
158

ஹ/அல்-அமீர் முஸ்லிம் மகா வித்தியலாயம், யகஸ்முல்ல, வீரகெடிய.

F.A. ரஸ்னியா
157

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்

நேரம் 1 மணி 15 நிமிடம்

வினாப்பத்திரம் II

ஆசிரியர்கள். எஸ்.ஐ.எல். முஸம்மில் எம்.எம். முபாரக்

பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

லியனா-டோ-டாவின்சி இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர். டாவின்சி பல ஓவியங்களை வரைந்தார். அவர் வரைந்த ஓவியங்களிலே உலகப் புகழ் பெற்ற ஓவியம் ஒன்று உள்ளது. இவ் ஓவியம் பரீஸ் நகரின் 'லோவ்ரே' அரும்பொருட் காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

டாவின்சி ஓர் ஓவியர் மட்டுமல்ல சிறந்த கவிஞராக, பொறியியல் வல்லுநராக, சிற்பியாக, கணித மேதையாக விளங்கியவர். இவர் ஆயிரத்து ஐந்நூற்று பத்தொன்பதாம் (1519) ஆண்டு உலகை விட்டுப் பிரிந்தார்.

இவர் உலகை விட்டுப் பிரிந்தாலும் இவரது ஓவியம் இவரது பெயரைப் பறைசாற்றிக் கொண்டே இருக்கிறது. அந்த வகையில் ஓவியங்கள் கண்ணுக்கு விருந்தளிப்பனவாகவும் சிந்திக்கும் ஆற்றலை தூண்டுவனவாகவும் குறிப்பால் பொருள் உணர்த்துபவையாகவும் மனதிற்கு அமைதியைத் தருபவையாகவும் விளங்குகின்றன.

01. *இப்பந்தியில் குறிப்பிடப்பட்ட பிரபல ஓவியர் யார்?*

02. *இவரது பிறப்பிடம் யாது?*

03. *சித்திரம் என்பதற்கு பந்தியில் இடம்பெற்ற சொல் யாது?*

04. *மூன்றாம் பந்தியில் இடம்பெற்ற சினைப் பெயர் ஒன்றைக் குறிப்பிடுக?*

05. *சிலை செதுக்குபவர் என்ன பெயர்கொண்டு அழைக்கப்படுவார்?*

முதல் பந்தியில் இடம்பெற்ற இரு இடப் பெயர்களை குறிப்பிடுக.

06. ....

07. ....

08. *புகழ் என்பதன் எதிர்ப்பதம் யாது?*

09. *மூன்றாவது பந்தியில் இடம்பெற்ற ஓர் உயர்திணைச் சொல்லை எழுதுக.*

10. *மட்டுமல்ல என்பதனை பிரித்து எழுதுக.*

பின்வரும் எண்கோலத்தை அவதானித்து வெற்றிடத்திற்கு வரவேண்டிய எண்ணின் கீழ் கீறிடுக.

11.



i. 91 ii. 101 iii. 81

12.



i. 34
ii. 24
ii. 26

பொருத்தமற்ற சொற்கூட்டத்தைத் தெரிவு செய்து அதன் கீழ் கீறிடுக.

13. i. *அப்பிள், தோடை, பலா, மா*

ii. *கொழும்பு, காலி, புத்தளம், கண்டி*

iii. *புத்தகம், பென்சில், பேனை, கடிகாரம்*

14. i. *தாய், தந்தை, மகன், மகள்*

ii. *சிங்கம், புலி, சிறுத்தை, மயில்*

iii. *காகம், புறா, குயில், கிளி*

கடதாசியொன்றை இரண்டாக மடித்து ஒரு பகுதியை வெட்டியுள்ளதை முதல் உருவில் காணலாம். இதனை விரித்துப் பார்த்தால் தோன்றும் உருவின் கீழ் கீறிடுக.

15.



1 2 3

16.



1 2 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் தரப்பட்டுள்ள உருவில் உள்ளவை அவ்வாறே அமைந்துள்ள உருவைத் தெரிவு செய்க.

17.

	1	2	3
A X N Y S	N B Y A X	A B C S X	Y N X S A

18.

	1	2	3
5 7 8 1 6 4	8 9 7 1 5 6	6 4 9 2 5 7	7 4 1 8 5 6

பின்வரும் படத்தை அவதானித்து பழங்களின் விலைகளைக் காண்க.



ரூபா 75.00

19. அப்பிள் பழமொன்றின் விலை ரூபா 35 எனின் தோடம்பழம் ஒன்றின் விலை யாது?

20. அப்பிள் பழமொன்றினதும் மாம்பழம் ஒன்றினதும் விலை எவ்வளவு?

21. ரூபா 300யை நான்கு பேருக்கு சமமாகப் பங்கிட்டால் ஒருவருக்கு கிடைக்கும் பணம் ரூபா ....

22. நான்கு பென்சில்களின் விலை ரூபா 14 எனின் ஒரு பென்சிலின் விலை ரூபா.........

23. இரண்டு வாழைப்பழங்களின் விலை ரூபா 6 ஆகும். 11 வாழைப்பழங்கள் வாங்க எவ்வளவு பணம் தேவை? ரூபா ....

24. இவ்வுருவில் எத்தனை முக்கோணங்கள் காணப்படுகின்றன?



உருவில் உள்ள பூச்சி இனங்களின் பெயர்களை எழுதுக.

25.

....

26. 

....

27.

....

28. 

....

மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுக.

29. கூட்டமாக வாழும் பிராணிகள் யாவை?

i. குளவி, மண்புழு ii. தேனீ, குளவி

iii. கறையான், வண்டு

30. வாழைப்பூவை நாடிவரும் பிராணி

i. கிளி ii. அணில்

iii. காகம் iv. புறா

31. பின்வரும் எத்தாவரத்தின் பூ, காய், பழம் போன்ற அனைத்தும் உணவிற்காகப் பயன் படுத்தப்படுகிறது?

i. முருங்கை ii. வாழை

iii. அகத்தி

32. வானவில் தோன்றாத நேரம்

i. காலை ii. மாலை

iii. இரவு

33. பழுதடைந்த உணவின் இயல்பு

i. பூஞ்சணம் பிடித்து இருக்கும்

ii. துர்நாற்றம் வீசும்

iii. சுவை குறைவடைந்து காணப்படும்

iv. மேற்கூறிய யாவும் சரி

34. நீர்நிலைகளை அண்மித்துக் காணப்படும் பறவைகள்

i. கிளி, கொக்கு

ii. நீர்க்காகம், கொக்கு

iii. மீன்கொத்தி, குயில்

35. ஒரு பாடசாலையின் தனித்துவத்தை எடுத்துக் காட்டுவது?

i. பாடசாலைக் கொடி ii. தேசியக் கொடி

iii. பௌத்த கொடி

36. அண்மைக் காலத்தில் எமது நாட்டில் தீவிர மாகப் பரவிச் சென்ற நோய்?

i. மலேரியா ii. டெங்கு

iii. யானைக்கால் நோய்

37. இலங்கை தபாற் திணைக்களத்தின் இலட்சினையில் உள்ளது?

i. புறா ii. தபாற் பெட்டி

iii. அன்னம்

38. நாருரு வேர் இல்லாத தாவரம்

i. நெல் ii. வெங்காயம்

iii. பப்பாசி

PUBLIC LIBRARY
JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39. டிசம்பர் மாதத்தில் கொண்டாடப்படும் விழா

i. தீபாவளி ii. நத்தார்

iii. வெசாக்

40. சோடியாக நடமாடும் பிராணி

i. கொக்கு ii. நீர்க்காகம்

iii. மைனா

பின்வரும் இலைகளின் பெயரைத் தெரிந்து எழுதுக.

(விளா இலை, அகத்தி இலை, பப்பாசி இலை, குரோட்டன் இலை, ஈரப்பலா இலை)

41. 

....

42.

....

43.

....

44. 9999 + 1 = ...

45. 1000 - 99 = ...

46. பத்தாயிரத்து பத்து என்பதை இலக்கத்தில் எழுதுக.

47. எண்கோலத்தில் அடுத்து வரும் இரு எண்களையும் எழுதுக.

3045, 3035, 3025, 3015, ..., ...

கட்டத்தினுள் உள்ள படங்களை அவதானித்து கீழ்வரும் இடைவெளிக்கு மிகப் பொருத்தமான பெயர்களை எழுதுக.

48. கோடை காலத்தில் மக்கள் .... அருந்துவர்.

49. .... கீரை வகைகளுள் ஒன்று.

50. .... கைக்கும்.

51. இரு அதிகாரிகள் .... யில் உரையாடினர்.

52. எனது தந்தை .... தொலைத்து விட்டுத் தேடினார்.

பின்வரும் சிங்களச் சொற்களுக்கான கருத்தை எழுதுக.

53. போலய ....

54. அஹச ....

பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கான கருத்தை எழுதுக.

55. FOUR ....

56. BLUE ....

பின்வரும் வாக்கியத்தில் உள்ள எழுவாய் சொற்களை புள்ளிக்கோட்டில் எழுதுக.

57. ஆசிரியர் மாணவர்களைப் பாராட்டினார் ....

58. குயிலைக் காகம் துரத்தியது. ....

பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்துக.

59.

த	னை	சி	யா	ர்	ந்	ள

....

60.

ஞ்	லை	பூ	சோ

....

61. "எனது அருமை நண்பன்" என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது நான்கு சொற்களையேனும் கொண்டிருத்தல் அவசியம்.

5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை 2013

நிக/ கல்பானவ முஸ்லிம் வித்தியாலயம், மொன்னேகுளம்

எம். ஹஸ்பான்
167

எம்.ஏ.எஸ். சாகிர்
158

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5ம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர் - 2013

கே/மா/ பதுரியா மத்திய கல்லூரி

M.N. சஸ்ஹித் றஹ்மி
189

M.S.M. இமாத்
182

M.M.M. றிப்தி
181


I.A.M.F. இபாதா
179

M.A.M. அனஸ்
179

M.F. ஆதிப் அப்ஸல்
177

M.F. ஆகிப்
173

M.F.I. ஆதிபா
172

M.N.F. இக்ரா
172

M. மாயிஸ் அஹமட்
171

M.R.M. மிப்றா
171

M.S. ஹுதா
171

M.M. அம்னா
168

M.F. றஹ்னா மனால்
168

S.A. முன்தஸிர் அஹமட்
166

M.S.M. அப்லல்
164

M.N.M. அக்ரம்
161

M.N.M. றாஸித்
160

M.M.M. சகீன்
159

M.S.F. இல்மா
159

M.N.M. ஆஸிப்
159

M.S.F. சம்ஹா
158

M.T. உடையார் ஸைன்
158

M.N. இன்ஸாப் அஹமட்
157


M.R.F. ஆதிகா
157

M.N.F. அப்றா
157

M.F.A.F. அஸ்மா
156

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Islamic Book House இன் 2014ஆம் ஆண்டிற்கான வெளியீடுகள்



Rs. 200.00



Rs. 300.00

Rs. 90.00

Rs. 300.00

Rs. 320.00

Rs. 165.00



Rs. 250.00



Rs. 120.00



Rs. 200.00

Rs. 300.00



Rs. 275.00



Rs. 350.00

Rs. 265.00

Rs. 250.00

Rs. 150.00

Rs. 350.00

இஸ்லாமிக் புக் ஹவுஸ் 77, Dematagoda Road, Colombo 09.
Tel: 0112684851, Fax: 0112688102 | Web: www.ibh.lk
www.facebook.com/Ibh.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org